# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 07 அதிர்வு 78 மார்கழி 2023 editor@ethiroli.com தொ.பே:1800 960 162













ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

# மதம் பிடித்த மண்

## இஸ்ரேல் – பாலஸ்தீனம்



ஒரு மத நம்பிக்கை கொண்ட மக்களிடையே உள்ள வெறுப்பு எவ்வாறு சண்டையாகி குருதிப்புனலாக மக்கள் உயிரை எடுக்கிறது பற்றி மிக அழுத்தமாகச் சொல்லும் மலையாளத் திரைப்படம் "குருதி". அந்தப் படத்தின் இறுதிக் காட்சியில் மம்மு கோயா சொல்லும் வசனம் ஒன்று உண்டு. " பட்டினி கிடந்தாலும், வீடு தரை மட்டமானாலும், சிறைவாசம் அனுபவித்தாலும் மனிதனுக்கு அவனுடைய எதிரி என்று நினைப்பவனை அழிக்காமல் இருக்க முடியாது. அது தானே வெறுப்பின் சக்தியாகும். அவன் அவனுடைய குழந்தைக்கு கல்வியளிக்காவிட்டாலும் , யாரை வெறுக்கவேண்டுமென்பதை கண்டிப்பாக சொல்லித்தருவான். அந்த வெறுப்பில் கிடந்து தலைமுறைகளாக உழன்று ,அந்த வெறுப்பின் நெருப்பிலேயே கரிந்து சாவான். மனிதன் இறந்து போனாலும் ,அவனுடைய உள்ளத்தில் எரியும் வெறுப்பு மறையாது . " தலைமுறை தலைமுறைகளாக தணியாது எரிந்து ,எதிரி என நினைக்கும் சந்ததிகளையும் ,தன் சொந்த இனத்தின் சந்ததிகளையும் தொடர்ந்து ஆயிரக்கணக்கான வருடங்களாக அழித்து வரும் வெறுப்பின் சக்தியைத்தான் இஸ்ரேல் - பாலஸ்தீன மண்ணில் நாம் பார்த்து வருகிறோம்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நடக்கும் அரேபிய இஸ்லாமிய - இஸ்ரேல் யூதர் போராட்டத்தைப் பற்றி விரிவாக எழுதவேண்டுமானால் இந்தக் கட்டுரை போதாது. இப்போது நடக்கும் யுத்தத்தைப் பற்றி பேசுவதற்கு முன் இந்த பிரச்சினையைப் பற்றிய சிறிய வரலாற்றினைப் பற்றி பார்க்க வேண்டும். 1914-க்கு முன்பு வரை பாலஸ்தீன பகுதியை ஒட்டோமான் பேரரசின் கீழ் அரேபியர்கள் பெரும்பான்மையாகவும், யூதர்கள் சிறுபான்மையினராவாகவும் இருந்தனர். ஒட்டோமான் பேரரசு வீழ்ந்த பின் பிரிட்டன் பாலஸ்தீனத்தை ஆண்டு வந்தது. மிகவும் பழமையான ஜெருசலேம் நகரம் யூத, கிறித்துவ மற்றும் இஸ்லாமிய மதத்தினருக்கு மிக மிக முக்கியமான பகுதியாகும். யூதர்களுக்கு இது பூர்வீக மண். பாலஸ்தீன அரபிகள் இது அவர்களது நிலம் என கோரி யூதர்களை எதிர்த்தனர். 1920க்கு பிறகான காலகட்டத்தில் தொடர்ந்து ஐரோப்பாவிலிருந்து யூதர்கள் குடியேற்றம் செய்யத் தொடங்கினர். 1947ல் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறிய பிரிட்டன் தங்களது வழக்கம்போல் நாட்டினை இரண்டாக பிரித்து ஒரு பகுதியை யூதர்களுக்கும் ( இஸ்ரேல்)



ஆனந்தன் வசந்தா
கிருஷ்ணமூர்த்தி

மற்றோரு பகுதியை பாலஸ்தீன அரபிகளுக்கும் (பாலஸ்தீனம்) ஜெருசலம் நகரை சர்வதேச நகரமாகவும் அறிவித்துவிட்டு வெளியேறிவிட்டனர். இந்த முடிவினை ஏற்காமல் அண்டை அரபு நாடுகள் யூதர்களுடன் போர் தொடுத்தனர். இந்த போரின் முடிவில் (1949 ) ஜோர்டான் ஆக்கிரமித்த பகுதி மேற்கு கரை, எகிப்து ஆக்கிரமித்த பகுதி காசா. பிறகு 1967ல் நடந்த யுத்தத்தில் இஸ்ரேல் மேற்கு கரை மற்றும் காசாவினை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தது. பிறகு 1990ல் நடைபெற்ற ஒஸ்லோ சமாதான நடவடிக்கையில் மேற்கு கரை பாலஸ்தீன ,இஸ்ரேல் மற்றும் இரண்டு பேருக்கும் சேர்ந்த பகுதிகள் என மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டது. என்றாலும் இங்கே முழுமையாக இஸ்ரேலின் ஆதிக்கத்தில் தான் இருந்து வருகிறது. ஒப்பந்தத்தின் படி காசா துண்டு நிலம் பாலஸ்தீனத்திற்கு சொந்தமென்றாலும் 2005 வரை இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில்தான் இருந்து வந்தது. 2006 நடந்த தேர்தலில் ஆயுத இயக்கமான ஹமாஸ், இடதுசாரி அமைப்பான படாஹ் தோற்கடித்து ஆட்சிக்கு வந்தது. அதன் பிறகு தொடர்ந்து ஹமாஸ்-இஸ்ரேல் யுத்தம் நடைபெற்றுவருகிறது. இரண்டு தரப்பிலும் ஏராளமான உயிரிழப்புகள் .

இனி கடந்த இரண்டு மாதங்களாக நடந்து வரும் இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தத்தைப் பற்றி பார்க்கலாம். மிகப்பெரிய தீ பற்றி எரிவதற்கு ஒரு சின்ன தீக்குச்சியின் உரசல் போதும் அல்லவா . அந்த மாதிரியான உரசஒலை முதலில் ஆரம்பித்து வைத்தது ஹமாஸ் . ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி ஹமாஸ் தலைமையிலான சுமார் 3,000 பாலஸ்தீனிய போராளிகளால் காசா பகுதியிலிருந்து தெற்கு இஸ்ரேலின் மீது பல முனை ஆக்கிரமிப்பைத் தொடங்கினர். இந்த தாக்குதல்களின் குறைந்தது 1200 இஸ்ரேலியக் குடிமக்கள் கொல்லப்பட்டனர். அதே நேரத்தில் 240 பேர் காசா பகுதிக்கு பணயக்கைதிகளாக போராளிகள் பிடித்துச் செல்லப்பட்டனர். தமது நாட்டுக்குள் ஊடுருவிய ஹமாஸ் போராளிகளை அழித்த பிறகு, இஸ்ரேலிய இராணுவம் தொடர்ச்சியான வான்வழி குண்டுவீச்சினை காசா பகுதியில் நடத்தியது. ஹமாஸ் அமைப்பு ஆறு நாட்களில் 6,000 குண்டுகள் காசா இலக்குகள் மீது வீசப்பட்டன என்று கூறியது. இஸ்ரேல் ராணுவம் தரைவழியாக காசா பகுதி முழுவதையும் முற்றுகையிட்டது. 3 டிசம்பர் 2023 நிலைவரப்படி 15,900 க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக, காசா சுகாதார அமைச்சகத்தின் அறிக்கை கூறுகிறது. இதில் 6,000 க்கும் மேற்பட்டவர்கள் குழந்தைகள். காசா பகுதியானது குழந்தைகளுக்கான மிகக் கொடிய போர்க்களமாக மாறியுள்ளது

இஸ்ரேல் ராணுவமோ எச்சரிக்கை கொடுத்தபிறகு தான் தாக்குதல் நடத்துகிறோம் என்கிறது. ஹமாஸ் அமைப்போ மக்களை வெளியேற வேண்டாம் என்கிறது. எப்படியிருந்தாலும் மக்கள் எங்கும் செல்ல முடியாது: "பாதுகாப்பான இடங்களில் தண்ணீர் இல்லை, சுகாதாரம் இல்லை, எங்கேயும் பாதுகாப்பாக இல்லை. மருத்துவமனைகளில் கூட பாதுகாப்பாக இல்லை" என்று யுனிசெஃப் செய்தித் தொடர்பாளர் ஜேம்ஸ் எல்டர் கூறினார். இருபுறமும் மாறி, மாறி பிணைக்கைதிகளை விடுவித்த பிறகும் யுத்தம் முடியவில்லை. இஸ்ரேல் ஹமாஸை முற்றாக அழிக்கும் வரையில் நிரந்தர ப்போர் நிறுத்தத்திற்கான கோரிக்கையை நிராகரித்துள்ளது.

காசாவின் துன்பத்திற்கு முடிவே இல்லை என்று தோன்றினாலும் நாம் பரந்த அளவில் இந்த விஷயத்தை பார்க்கவேண்டும். கடந்த மாதம் ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் மேற்குக் கரையில் ஏற்படப்போகும் அபாயங்களை பற்றி எச்சரித்தது. ஒக்ரோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் தாக்குதல்களுக்குப் பிறகு இஸ்ரேலியப் படைகளின் தாக்குதல்கள் மூலம் ஏராளமானோர் வீடுகளை இழந்துள்ளனர். மேற்கு கரையில் நடக்கும் வன்முறைகள் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக அதிக அளவில் இருக்கின்றன. இது மட்டுமல்லாது யேமெனின் ஹௌதி அமைப்பும், ஈரானைச் சேர்ந்த ஹிஸ்புல்லா போராளி அமைப்புகளும் இஸ்ரேலுடன் சண்டையிட்டு குழப்பத்தை மேலும் சிக்கலாக்கியிருக்கின்றனர்.

இந்த பிரச்சினைக்கு என்ன தான் தீர்வு ? . எல்லா நாடுகளும் வலியுறுத்தும் இரண்டு நாடுகளாக பிரிப்பது தான் தீர்வா (இஸ்ரேல்,பாலஸ்தீனம்) இல்லை மூன்று நாடுகளாக பிரிப்பதா ? (இஸ்ரேல், பாலஸ்தீனம் மற்றும் சர்வதேச ஐ .நா.வின் கீழ் வரும் பகுதி). தெரியவில்லை. மதத்தின் பெயரால் பிரிந்து கிடக்கும் மனிதர்களை ஒன்று சேர்ப்பதுதான் தீர்வாக இருக்க முடியும். அதற்கு இரண்டு நாடுகளின் தலைவர்களும் வெறுப்பினை கைவிடவேண்டும் . ஒஸ்கார் பரிசு வாங்குகையில் ஏ. ஆர். ரஹ்மான், "என் வாழ்நாள் முழுவதும் நான் வெறுப்பையும் அன்பையும் தேர்ந்தெடுக்க வேண்டிய சமயங்களில் நான் எப்பொழுதும் அன்பையே தேர்ந்தெடுத்தேன், அதனால் தான் நான் இங்கே இருக்கிறேன்." என்று சொன்னார் . இஸ்ரேல் - பாலஸ்தீன மண்ணில் வழிந்தோடும் 'குருதி'யில் இரு தரப்புகளும் இதுவரை வெறுப்பினை மட்டுமே தேர்ந்தெடுத்து தங்களின் அழிவுக்கு தாங்களே காரணமாக இருந்து வந்திருக்கின்றனர். ஒவ்வொரு நாளும் இறந்து கிடைக்கும் குழந்தைகளின் புகைப்படங்களைப் பார்க்கும்போது வயிறு எரிகிறது. இரு தரப்பினரும் அன்பினைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சமயமிது.




Australian Government
Department of Home Affairs
VICTORIA
தமிழர் திருநாள்
Tamil Festival Australia
விக்டோரியா வாழ் தமிழர்கள் மற்றும்
பல சமூக அமைப்புக்கள்
இணைந்து வழங்கும்
NORTHERN TIGERS
TAMIL ARTS
T G R
Singing fish
Tamilar
Victorian Tamil Association
THE TAMIL FESTIVAL
AUSTRALIA
தமிழர் திருநாள்
ஆஸ்திரேலியா
2024
தமிழ்
மரபுத் திங்கள்
அனைவரும் வருக ! அனுமதி இலவசம்!
தைப்பொங்கல், இயற்கை மற்றும் பல்லினக் கலாசாரங்களை கொண்டாட தமிழ்
ஆஸ்திரேலியர்களையும் பரந்த தமிழ் சமூகத்தையும் ஒன்றிணைக்கின்ற
முழுக் குடும்பத்திற்கும் களிப்புத் தரும் முழுநாள் நிகழ்வு
Saturday, Jan 27th 2024
Starts @ 8.30 am
Nunawading Community Hub and Tunstall Park
96-106 Springvale Rd , Nunawading, VIC 3131
For more details Contact : 0403 474 145, 0413 566 380,0403 436 970, 0405 762 754
vanakkam@tamilfestival.org.au | www.tamilfestival.org.au

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:07 அதிர்வு: 77 மார்கழி 2023 தொ.பே:1800 960162

# கார்ப்போர்ட் புலிகள்

தாயகத்திலும் சரி, புலம்பெயர் தேசங்களிலும் சரி தமிழர்கள் தடுக்கி விழும்போதெல்லாம் 'புலிகளின் தளபதிகள்' மீதுதான் விழவேண்டியிருக்கிறது. அந்தளவுக்கு உலகெங்கும் புலிகளின் தளபதிகள் என்று சொல்லிக் கொள்வோர் நிறைந்திருக்கிறார்கள். அவர்களிடம் உரையாடினால் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்ட வரலாற்றில் இல்லாத படையணிகள், சமர்கள், தலைவரைக் கண்ட சந்தர்ப்பங்கள் என்று ஏகத்துக்கும் அது நீண்டு கொண்டே செல்லும். அது முடிவிலியானது. அனுமர் வால் கூட சிலவேளைகளில் முடியக்கூடும். ஆனால் இவர்களின் போராட்டக் கதைகளும், தாம் தளபதிகள் என நிரூபிப்பதற்காகச் சொல்லப்படும் வீரதீர சாகசங்களும் முடிவுக்கே வராது. ஆனால் அதிலும் ஒரு சுவாரசியம் உண்டு. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சண்டையைப் பற்றிச் சொல்வார்கள். சிலவேளைகளில் அவர்கள் முன்னர் ஒருபோது எமக்குச் சொன்ன சமரைப் பற்றிக் கேட்டால், அதை வேறொரு விதமாக மீண்டும் சொல்வார்கள். முதல் சொன்னதை விடவும் இம்முறை சொல்வது இன்னும் வேறுபட்டதாக, கதை சொல்பவரின் நாயகத்தனத்தை அதிகரிப்பதாக இருக்கும். அந்தக் கதைகளைக் கேட்கும் எவருக்கும் 'புலிகளின் தலைவர் பிரபாகரனை விடவும் இவர்கள் தான் நாட்டுக்காக அதிகம் போராடியிருக்கிறார்கள்' என்ற எண்ணமும் வரக்கூடும். இப்படியெல்லாம் வீரப்பிரதாபக் கதைகள் சொல்லித்திரிவோர் 'தாம் இன்னமும் புலிகள் அமைப்பை இரகசியமாகச் செயற்படுத்தி வருவதாகவும்' சொல்லிக் கொள்வர்.

இப்படியெல்லாம் இன்னமும் புலிகளாக உறுமிக்கொண்டு திரிவோரிடம் ' புலிகள் மீது அரசாங்கம் சுமத்தும் போர்க்குற்ற விசாரணைகள் நீங்கள் ஏன் புலிகள் சார்பாக எதிர்கொண்டு, அவற்றைப் பொய்யென நிரூபிக்கக் கூடாது?' என்று கேட்டுப்பார்த்தால், அவர்கள் நிஜப்புலிகளா அல்லது கார்போர்ட் புலிகளா என்பதைக் கண்டுபிடித்துவிடலாம். நிறைகுடம் தளம்பாது. மக்களின் விடுதலைக்காக அர்ப்பணிப்போடு போராடிய எவரும் தங்கள் சாகசங்களை சந்தையில் கூவிக்கூவி விற்பதில்லை. அவர்கள் தம்மை இனங்காட்டாமல் வாழவே விரும்புவர். ஆனால் சில தனிப்பட்ட நலன்களுக்காக, போரின் வாசனையைக்கூட நுகர்ந்திராத பலரும் தம்மைப் புலிகளாகவும், புலித் தளபதிகளாகவும் தமக்குத் தாமே மகுடம் சூட்டிக்கொண்டு உலாவருகின்றனர். இப்படி இவர்கள் இன்னமும் புலிகள் இருப்பதாகப் போடும் நாடகம் உண்மையில் இலங்கை அரசுக்கே சாதகமாக இருக்கின்றது. முள்ளி வாய்க்காலோடு, புலிகள் தமது ஆயுதங்களை மௌனித்ததோடு, அந்த அமைப்பின் சகல செயற்பாடுகளும் முற்றுப்பெற்றுவிட்டன. அதனால் தனது படைகளின் இருப்பையும், இராணுவக் கெடுபிடிகளையும், போர்க்குற்றங்களையும் நியாயப்படுத்தமுடியாத இக்கட்டு நிலை இலங்கை அரசுக்குத் தோன்றியிருந்தது.

இந்தநிலையில் தான் 'கார்ப்போர்ட் புலிகளின்' நடவடிக்கைகள் இலங்கை அரசுக்கு கை கொடுத்துள்ளன. புலிகள் வெளிநாடுகளின் இன்னமும் செயற்றிறனோடு உள்ளனர் என்ற வாதத்தை முன்வைத்து, இலங்கை அரசு தான் செய்த, செய்கின்ற அத்தனை அட்டூழியங்களையும் நியாயப்படுத்த முனைகின்றது. 'புலிகள் செய்த போர்க்குற்றங்களை அவர்களிடம் விசாரியுங்கள்' என்றும் அது சொல்கிறது. ஆனால் அப்படி ஒரு விசாரணை நடந்தால், இந்தக் கார்ப்போட் பேர்வழிகள் கம்பி நீட்டிவிடுவார்கள். தாமுண்டு தம் வேலையுண்டு என்றிருக்கும் முன்னாள் போராளிகளே இதனால் சிக்கலுக்குள் மாட்டிக்கொள்வர். இதுவே யதார்த்தம். துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்பதைப் போல, புலிகளின் பெயரைச் சொல்லி நிதி சேகரிக்கவும், சொகுசு வாழ்க்கையை அனுபவிக்கவும் தம்மைப் புலிகளின் தளபதிகளாகக் கதையளக்கும் நபர்களை நாம் இனங்கண்டு விலகிச் செல்வதே இப்போதைக்குள்ள ஒரே தெரிவாக இருக்கும்.




# போகிற போக்கில்

# ஒரு விமர்சனம்

சத்தியா நிரஞ்சன்

*கங்காரு சொன்னது சரிதான்..*

பூங்குன்றனார் ஆவி ஜெயமோகனின் சிந்தைக்குள் புகுந்து என் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதில் உள்ள "யாதும்" என்பதற்கும் "யாவரும்" என்பதற்கும் புதிய பரிமாணத்தில் பாசமும் பரவசமும் பகிடியும் (நகைச்சுவை) கலந்து ஒரு படம் எடுக்கக் கேட்டதாம் என்று எனக்கு கங்காரு சொன்னது. திரையரங்கிற்குள் நுழைந்த நேரத்தில் இருந்து இருக்கையோடு கட்டிப்போட்டு கருத்தும் சொன்னது "யாதும் யாவரும்". எங்கள் தமிழ்ச் சமூகம் தங்களுக்காக வாழ்வதைவிட மற்றவர்களுக்காக வாழுறது தான் கூட. சக்தியை இதுக்காகவே விரயம் செய்து வாழ்வின் சுவையையும் நாட்களையும் வீணாக்கிறதை படம் உறைக்கச் சொல்லுது ஆனால் சுவையாச் சொல்லுது. படம் இரண்டு முக்கியமான விடயங்களை திரைக்கதையில் கலந்து கங்காரு தாவும் சிங்கார பூமியில் வாழும் சிட்னியார் வாழ்வியல் வழியே வெளிப்படுத்துகிறது. ஒன்று வாழ்க்கைத்துணை என்பது வயதை கடந்த விடயம். அடுத்தது ஓரினச் சேர்க்கை. இரண்டிலும் சமூகமாக நாங்கள் மிகவும் பின் தங்கிய நிலை. அதுவும் முதலாம் தலைமுறை வந்தேறு குடிகளில் பெரும்பாலானோர் இவ் விடயங்களை ஏற்பதாகவும் இல்லை. இதனைப் பற்றிய அறிவைத் தேட முயற்சிப்பதுமில்லை. இதன் அவசியத்தை, ஐபாட் ஸ்கிரீனில் சுண்டுவது போல் எங்கள் எண்ணங்களில் சீண்டி விடுகிறார் ஜெயமோகன். தாய் சேயின் பாசம், தந்தை மகனின் உணர்வு, மருமகள் மாமியார் முறுகல் என குடும்ப பிணைப்புகளின் தன்மைகளை யதார்த்தமான, உணர்வுபூர்வமான வகையில் நகைச்சுவை தெளித்து லெமன் லைம் பிற்றர் (lemon lime bitters) என்ற அவுஸ்ரேலிய மண்ணில் உருவான சுவையான மென் பானத்திற்கு நிகராக பாத்திரங்களில் நிரப்பி எமக்கு ஆர்வமாக அருந்த தருகிறது 'யாதும் யாவரும்'. உடைந்த பூஞ்சட்டியை எப்படி ஒட்டவைப்பது குளிர் காலத்தில் அணியும் கோட்டின் (Winter cloak) விரிவான பயன்பாடு என்ன, சுவீட்ஸர்லாந்தையும் ஜேர்மனியையும் எப்படி ஒரு சாப்பாட்டு மேசைக்கு கொண்டுவருவது போன்ற உத்திகளை உக்கிரமாக இல்லாமல் கன்னத்தில "ம்மா" கிடைக்கும் போது வரும் சுகத்தோடு எமக்கு அறியத்தருகிறது இந்த திரைப்படம். கதாபாத்திரங்கள் அத்தனையும், அதில் வரும் முப்பெரும் நவயுக தேவியர் கட்டும் சேலையைப் போல அழகாக கதையோடு கட்டிக் கொண்டே நகர்ந்தது. அழகு மட்டுமல்லாமல் ஆழமான நடிப்பாற்றல் மிக்க நடிகர்கள் கோட்டையில் ஒரு ஓட்டையும் இல்லை. வசனங்களின் வெளிப்பாடைத் தாண்டி அவர்களின் அசைவுகளும் முகபாவங்களும் கண்களும் அதிகமாகவே எம்மோடு பேசிக. இரண்டாம் தலைமுறையின் நடிப்பை பார்த்த எங்கட நாணா "செல்லி வேலையில்லை" என்று சொன்னவர். இசை மனங்களை வருடிச்சென்றது. அதில் பிணைந்த வரிகள், பாடகர்களின் 'பீல்' எல்லாம் எனக்கு பிடித்த ஒரு பிரியமான பிரியாணி சாப்பிட்ட திருப்தியைத் தந்தது. ஒலி ஒளி அமைப்பு கமராவின் நகர்வு மிக நன்று சில இடங்களில் மட்டுமே சிறு ஆட்டம் கண்ணூறாக. இயல்புத் தன்மையில் இறுகப் பற்றி, பொய்மான் திரைப்படம் வழியாக எம்மை மெய்யாக சுட்டார். பின் யாதும் யாவரும் வழியாக எம்மைக் குத்தியிருக்கிறார். கிளவுட்டில் நிறைய திறமையை ஸ்டோர் பண்ணி வைத்து பலரின் இரசனைக்கும் ஏற்ற வழியில் டாடா வழங்கும் குறும்புக்கார படைப்பாளி ஜெயமோகன் இக்காலத்திற்கு கட்டாயம் தேவையான தலைமுறைகளை இணைக்கும் ஒரு இன்டர்நெட் புரவைடர். படத்தில் வரும் வசனங்களின் மொழிகலப்பு இதன் முக்கியமான ஆதாரம். ஒரு ஜெய உலகம் தானா சேர்ந்த கூட்டத்தால உருவாக்கப் பட்டு வருகிறது. புதிய உறவுகள் இணைகின்றன எம் சிந்தனை விரிகிறது. பூங்குன்றனாரின்ட ஆவி வேலையைக் காட்டுகிறது. கங்காரு சொன்னது சரிதான்.

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துக்கள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

**ஆசிரியர்பீடம், எதிரொலி**



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175



# பணந்தின்னிகளுக்கும் பிணந்தின்னிகளுக்கும் பலியிடப்பட்ட துவாரகா

துவாரகா நாடகம் முடிவுக்கு வந்துவிட்டது. எதிர்பார்த்ததைப் போலவே ஈழத்தமிழர்கள் யாருமே அந்த நாடகத்தில் ஆர்வம் காட்டவில்லை. நம்பவில்லை. எடுத்த எடுப்பிலேயே இது போலியெனக் கடந்துவிட்டனர். காரணம், ஈழத்தமிழர்களுக்கு தலைவர் வே.பிரபாகரனை நன்றாகத் தெரியும். அவரின் கொள்கைப் பிடிப்பின் ஆழம் தெரியும். இவ்வளவு அட்டூழியங்கள், அடக்குமுறைகள், கைதுகள், விசாரணைகளின் பின்னும் எவ்வித அரசியல் பின்புலமுமின்றி ஒவ்வொரு வருட மாவீரர் நாளுக்கும் தமிழ் மக்கள் திரளுகின்றார்கள் எனில், அதற்குத் தலைவரையும், இயக்கத்தையும் நன்றாக விளங்கிக்கொண்டதன் வெளிப்பாடே காரணம்.

இயக்கமும் சரி, தலைவரும் சரி வரித்துக்கொண்ட கொள்கையிலிருந்து ஒருபோதும் பின்வாங்கியது கிடையாது. அவ்வாறு கொள்கையிலிருந்து தான் விலகினால், சக போராளியே தன்னைச் சுட்டுக்கொல்லாம் என்பதை 2002 ஆம் ஆண்டிலும்கூட கிளிநொச்சியில்வைத்து தலைவர் தெளிவுபடுத்தினார். தலைவர் மாத்திரமல்ல, அவரோடு இணைந்து பயணித்த அத்தனை போராளிகளின் கொள்கையும் இதுவேதான். ஆதலால்தான் தமிழர்கள் இன்றும் மாவீரர்களுக்காகத் திரள்கின்றனர். அந்தத் தியாகத்தின் உன்னதத்தை நினைவுகூருகின்றனர். அந்தத் தியாகத்தின் கூட்டுருவான தமிழ்த் தேசிய அரசியலைத் தக்கவைத்திருக்கின்றனர். ஆகவே தமிழ்த் தேசியச் சிதைப்புக்காகவும், ஈழத்தமிழர்களைச் சிதைப்பதற்காகவும் செயற்படும் அக - புறச் சக்திகளுக்கு தலைவர் பிரபாகரனையும், மாவீரர் நாளையும் களத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. இந்தத் தேவைக்காகத் தான் துவாரகாவைக் கையிலெடுத்திருக்கின்றனர்.

தலைவர் பிரபாகரன் தன்னை தமிழ் இன விடுதலைக்கான கடவுளாகக் கருதவேண்டாம். அது தமிழ் இனத்தின் பலவீனம் எனப் பலமுறை குறிப்பிட்டும், தமிழர்கள் அவரைக் கடவுளாகவே மதிக்கின்றனர். தமிழர்களின் விடுதலைக்காகத் தன் உடல், பொருள், ஆவி என அனைத்தையும் ஒப்புவித்த ஒப்பற்ற வீரனாகக் காண்கின்றனர். தான் மாத்திரமின்றி, தன் குடும்பத்தையும் இந்த இனத்தின் விடுதலை வேள்விக்குப் பலிகொடுத்தவராகப் போற்றுகின்றனர். தலைவரின் மூத்த புதல்வன் சார்ள்ஸ் ஆனந்தபுரச் சமரில் வீரகாவியமானதும், ஒரே புதல்வி துவாரகா முள்ளிவாய்க்காலில் கரும்புலியாக வெடித்தமையையும் இறுதிவரை விடுதலைப்புலிகளோடு பயணித்த அனைத்து தமிழ் மக்களும் அறிவர். எனவேதான் தலைவரின் வேண்டுகோளையும் மீறித் தமிழர்கள் அவரைத் தம் கடவுளாகக் காண்கின்றனர்.

தமிழர்களின் உளவியலாக மாறிவிட்ட இந்த எண்ணத்தை மாற்றுவதற்கு தலைவர் பிரபாரகரனை தமிழ் மக்கள் மனங்களிலிருந்து அகற்றவேண்டும். எனவே அவர் குறித்த தமிழர்களின் பார்வையைச் சிதைக்க வேண்டும். எனவே எல்லோரின் பிள்ளைகளையும் களத்திற்கு அனுப்பிய பிரபாகரன் தன் பிள்ளையை மாத்திரம் வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டார் என்கிற விசம விதையை தமிழர் மனங்களில் விதைப்பதற்காகவே துவாரகாவுக்கு மீளுயிர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த மீளுயிர்ப்பைச் செய்தவர்கள் குறித்த சந்தேகம் தமிழர்கள் மத்தியில் நீண்டகாலமாகவே உண்டு. உணர்ச்சிக்கவிஞர் காசியானந்தன், பழ. நெடுமாறன், சேரமான், சினிமா இயக்குநர் களஞ்சியம் போன்றோர் இதில் முதன்மையானவர்கள். இந்தியாவில் தடைசெய்யப்பட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினராக இருந்து, தமிழகத்தில் தஞ்சமடைந்திருக்கும் கவிஞர் காசியானந்தன், இற்றைவரைக்கும் இந்திய அரசின் எவ்வித நெருக்குவாரங்களுக்கும் உட்பட்டதில்லை. சொந்தமாக சொத்துக்கள் வாங்கி, மாடமாளிகை அமைத்து சென்னையில் வாழ்கிறார். அதேபோல பழ.நெடுமாறன், தன்னை ஈழப் போராட்ட ஆதரவாளராகக் காட்டிக் கொண்டவர். விடுதலைப் புலிகளோடு நெருங்கிய தொடர்பினைப் பேணியவர். பலமுறை வன்னிக்கு வந்து சென்றவர். புலிகளின் மௌனிப்பிற்குப் பின்னர் இவரது செயற்பாடுகளை ஆழமாக அவதானித்தால், இவர் இந்திய அரசின் புலனாய்வு நடவடிக்கைகளுக்காகப் புலிகள் அமைப்புக்குள் ஊடுருவியிருந்த ஒருவர் என்பது தெளிவாகும். தன்னைத் தீவிர விடுதலைப்புலிகளின் ஆதரவாளராகக் காட்டிக்கொள்ளும் சேரமான், அந்தப் பெயரைப் பயன்படுத்தி நிதி திரட்டுவதில் வல்லவர். இப்போதும் அதனையேதான் செய்திருக்கிறார். துவாரகாவின் மீள்வருகையைப் பயன்படுத்தி, எதிர்பார்க்கப்பட்ட அளவைவிட அதிகநிதி திரட்டியதாகக் கூறப்படுகின்றது. இயக்குநர் களஞ்சியம், தி.மு.க சார்பானவர். சிலகாலம் சீமானோடு இணைந்திருந்தார். பின்னர் தனிக்கட்சி ஆரம்பித்தார். பணம் எந்த வழியால் வருகிறதோ, அந்த வழியால் பேசக்கூடிய ஒருவர் களஞ்சியம். எனவே சேரமானின் பக்கத்தால் வந்த பணத்திற்கு விசுவாசமாகப் பணியாற்றியுள்ளார்.

இவ்வாறானதொரு கபட நாடகத்தினை ஆடவேண்டிய தேவை இந்தியாவுக்கும் உண்டு. இலங்கை அரசுக்கும் உண்டு. போர் முடிந்து 14 ஆண்டுகளாக முயற்சித்தும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இந்தியாவினால் ஆழமாக எதனையும் செய்யமுடியவில்லை. தம் நிகழ்ச்சி நிரலில் வெற்றிபெற முடியவில்லை. புலமைப் பரிசில்களுக்கு விலைபோகும் பல்கலைக்கழகங்களை அண்டிய "புலமையாளர்" தரப்பொன்றை மாத்திரமே விலைக்குவாங்க முடிந்திருக்கின்றது. அந்தப் புலமையாளர்களின் பேச்சினையோ, அறிக்கையை தமிழர்கள் ஒரு பொருட்டாகக் கூட எடுப்பதில்லை என்பதைக் கடந்த 14 வருடங்களுக்குள் இந்தியா உணர்ந்திருக்க வேண்டும். இவ்வாறு தமிழர்களைத் தம் கட்டுக்குள் கொண்டுவருவதைத் தடுக்கும் சக்தி எதுவென ஆராய்ந்தார்கள். அது பிரபாகரன் எனும் நாமம் தான். எனவே அந்த நாமத்தை தமிழர் அரசியலிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் இறங்கிவிட்டனர். அதற்காகப் பிரபாகரனைத் தமிழ் மக்கள் தூற்றத்தக்க விடயங்களைக் கையிலெடுத்திருக்கின்றனர். அதில் ஒன்றுதான் துவாரகாவின் மீளுயிர்ப்பு.

இலங்கை அரசு என்றுமில்லாத வகையில் பொருளாதாரப் பின்னடைவைச் சந்திந்திருக்கின்ற போதிலும், வருடந்தோறும் இராணுவத்திற்குச் செலவிடும் தொகை அதிகமானதாகும். மிகச் சிறியதொரு நாடு தன் அதிக வருமானத்தினை தேசிய பாதுகாப்பிற்காக செலவழிக்கிறது. அதுவும் வடக்கு, கிழக்கில் குவிக்கப்பட்டுள்ள இராணுவமயமாக்கல் செயற்பாடுகளுக்காக செலவழிக்கின்றது. இலங்கைக்கு நிதி தரவல்ல அனைத்து நாடுகளும், அமைப்புகளும் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி, இராணுவக் குறைப்பை செய்ய வலியுறுத்தி வருகின்றன. இராணுவ ஒடுக்குமுறைக்குப் பயன்படும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக்கோருகின்றன. ஆனால் அரசு இவை எதனையும் செய்யத் தயாரில்லை. இன்னமும் நாட்டில் பயங்கரவாத அச்சுறுத்தல் உண்டு, எனவே இராணுவக் குறைப்பைச் செய்ய முடியாது என சாக்குப்போக்குச் சொல்லிவருகின்றது. இந்தச் சாக்குப்போக்கை மேலும் உறுதிப்படுத்தும் விதமாகவே துவாரகாவின் மீளுயிர்ப்பு வெளிவந்திருக்கின்றது.

இவ்வளவு அரசியலுக்கு மத்தியில் வெளியான துவாரகாவின் மீளுயிர்ப்பானது, ஒரேயொரு நன்மையை மாத்திரம் தமிழர்களுக்கு விளைவித்துள்ளது. இனிமேல் யாரும் துவாரகாவின் கதையை எடுத்துக்கொண்டு வரமுடியாது. அதேபோல எந்தச் சதிப் பின்னணியிலும் இன்னொரு துவாரகாவையும் கொண்டு வரவும் முடியாது. காட்சிப்படுத்திய துவாரகாவை ஒட்டுமொத்தத் தமிழர்களும் நிராகரித்துவிட்டனர். துவாரகா, ஒரு சிலரின் பணத் திரட்டலுக்காகவும், இந்திய - இலங்கை அரசுகளின் அரசியலுக்காகவும் மீளுயிர்ப்புக் கொடுக்கப்பட்டார் என்கிற உண்மையைத் தமிழர்கள் அறிந்துகொண்டார்கள். இதனை ஒரு நாடகம் எனக் கடந்தும் விட்டனர். தலைவர் கற்பித்த 'விழிப்புத்தான் விடுதலையின் முதற்படி' என்பதை மீளவும் நிரூபித்துவிட்டனர். இந்த மாதிரியான உருட்டல் - பிரட்டல்களைக் கொண்டு தமிழகத் தமிழர்களை ஏமாற்றலாமே தவிர, ஈழத்தமிழர்களை ஏமாற்ற முடியாது என்கிற செய்தியை முகத்தில் அறைந்தால் போல சொல்லியும் விட்டார்கள் ஈழத்தமிழர்கள்.

**- சுகந்தன், ஈழம் -**

HAIRCUT + SHAVING
SHAVING
KIDS HAIRCUT
HEAD OIL MASSAGE
MENS HAIRCUT
BEARD TRIMMING
DYE ONLY
VIP PACKAGE
INCLUDES HAIRCUT + SHAVING + HEAD OIL MASSAGE
BABY HEAD HAIR SHAVING BY APPOINTMENT ONLY
THAYA BARBERSHOP
Less waiting time
Best service
Book an appointment today!
For inquiries,
please call 0413 233 387 (THAYA)

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# முரண்படும் நீதிகள்

● சியாமளா யோகேஸ்வரன்

கார்த்திகை ஏழாம் திகதி உயர் நீதிமன்றத்தினால் அவுஸ்திரேலிய வரலாற்றில் முக்கியமான தீர்ப்பொன்று வழங்கப்பட்டிருக்கின்றது. காலவரையின்றிக் குடிவரவுத்திணைக்களத்தினால் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது சட்டத்திற்கு முரணானது என்ற ஏழு நீதிபதிகளை உள்ளடக்கிய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பானது, ஆளும் கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையே முரண்பாட்டைக் கிண்டி விடுவதற்குப் போதுமானதாக இருக்கின்றது. கைதிகளைத் தடுத்து வைத்திருப்பதற்கு உரிமையில்லையே தவிர, அவர்களை நாடு கடத்தும் முடிவை எடுக்கும் அதிகாரம் அரசாங்கத்திடம் இருப்பதைப் பற்றி சட்டம் எந்தத் தீர்ப்பையும் சொல்லவில்லை. காரணமின்றிக் காலவரையின்றித் தடுத்து வைக்கப்பட்டவர்களில் பாரதூரமான குற்றச்செயல்களில் ஈடுபட்டுத் தண்டனை பெற வேண்டியவர்களான போதைவஸ்து கடத்தியவர்கள், சிறுவர் தொடர்பான பாலியல் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள், கொலைக்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் பாலியல் துர்ப்பிரயோகம் செய்தவர்கள் என்பவர்கள் மட்டும் அடங்கியிருக்கவில்லை, சொந்த நாட்டில் வாழ முடியாமல் உயிர்ப்பயத்தினால் பாதுகாப்புத் தேடி அடைக்கலம் கேட்டிருப்பவர்களும் அடங்கியிருப்பதுதான் வேதனைக்குரியது. சொந்த நாட்டில் குற்றம் இழைத்து விட்டுத் தண்டனைக்கு அஞ்சி இங்கு அடைக்கலம் கேட்பவர்களையும்,வாழ்வதற்கு வழியின்றி அடைக்கலம் தேடிக் காத்திருப்பவர்களையும் ஒரே தட்டில் வைத்து ஒரே மாதிரியாக எடை போடும் செயலானது எந்த விதத்திலும் நியாயமாக மாட்டாது.

வேறு நாட்டைச் சேர்ந்தவர்களே குடிவரவுச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் ஆவார்கள். அவர்களை நாட்டுக்குள் அனுமதிக்க முடியாமலும், அவர்களின் சொந்த நாட்டுக்கு அனுப்பினால் மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டு விடுவார்கள் என்பதால் திரும்ப அனுப்ப முடியாத நிலையிலுமாக பத்து பதினைந்து ஆண்டுகளாகத் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து கைதி ஒருவர் சம்பந்தமான பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வாதபிரதிவாதங்களுக்கு உள்ளாக்கப்பட்டது. தடுத்து வைக்கப்பட்டோர் விடுதலை செய்யப்பட ஆவன செய்யப்பட வேண்டும் என்ற பெரும்பான்மையோரின் முடிவு சில நிபந்தனைகளுடன் எட்டப்பட்டது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து நடவடிக்கை எடுத்தே ஆக வேண்டிய கட்டாயமும் அழுத்தமும் அரசாங்கத்துக்கு அதிகரித்ததை அடுத்து 141 பேர் இதுவரையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதற்காகவே காத்திருந்தாற் போன்று எதிர்க்கட்சியினர் சமூகத்தின் பாதுகாப்பு, மக்களின் பாதுகாப்பு, நாட்டின் அமைதி என்று குரல் கொடுக்கத் தொடங்கி விட்டனர். விடுவிக்கப்பட்டவர்களில் சமூகத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடும் எனக் கருதப்பட்ட நான்கு பேர் எங்கு இருக்கின்றார்கள் என்றே தெரியாத நிலை அரசாங்கத்துக்கு பெரும் தர்மசங்கடமான நிலையைக் கொடுத்துள்ளது. விடுவிக்கப்பட்டோர் தொடர்ந்து கண்காணிக்கப்படவேண்டும், காலில் சங்கிலி பூட்டப்பட்டு அவர்களின் இருப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும், எல்லா நேரங்களிலும் வெளியில் செல்ல முடியாது என்ற பொதுவான விதிமுறைகள் இருந்தாலும் அவை ஏன் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது இப்போது ஒரு கேள்விக்குறியே. அதனால் தான் தொடர்ந்தும் கைதிகள் விடுவிக்கப்படுவது சிக்கலான ஒன்றாக மாறி விட்டிருக்கின்றது. ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கத்தை மட்டுமே கருத்திற் கொண்ட எதிர்க்கட்சிக்கு உயர்நீதிமன்றம் எடுத்த முடிவை அமுல்படுத்திய லேபர் அரசாங்கத்தைக் குறை சொல்வதற்கு நல்லதொரு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

சொந்த நாட்டில் பாதுகாப்பாக வாழ முடியாத நிலையில் அகதி அந்தஸ்து கோரி ஆண்டாண்டுகளாக் காத்திருப்பவர்களின் நிலை தான் இங்கே பரிதாபத்துக்குரியதாகின்றது. அகதிகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் எல்லைப் பாதுகாப்பைக் குலைத்து நாட்டின் பாதுகாப்புக்குக்குக் குந்தகம் விளைவிப்பவர்கள் தான் ஆளுங்கட்சியினரான லேபர் என்று சொல்லி வாக்கு வங்கியைச் சுவீகரித்துக் கொள்ள விரும்பும் எதிர்க்கட்சியினருக்கு சார்பாக இந்த விடயம் அமைந்து விட்டது. அத்துடன் வழமை போன்று லேபர் கட்சியினர் அகதி அந்தஸ்து கோருபவர்களுக்குக் சார்பாக முடிவெடுத்து யாரையும் விடுவித்து விடக் கூடாது என்று எதிர்க்கட்சியினர் முட்டுக்கட்டை போடுவதன் மூலம் வெளியுலகக் காற்றைச் சுதந்திரமாகச் சுவாசிக்கத் துடிக்கும் பல அகதிகளின் மனதில் பேரிடி விழுந்திருப்பதையும் மறுக்க முடியாது. ஓரிரு குற்றவாளிகளால் ஒட்டுமொத்தமாக குடியுரிமை கோருபவர்களின் நியாயமான கோரிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் நிராகரிக்கப்படுவது வேதனை தருமொன்றே.



**சொந்த நாட்டில் பாதுகாப்பாக வாழ முடியாத நிலையில் அகதி அந்தஸ்து கோரி ஆண்டாண்டுகளாக் காத்திருப்பவர்களின் நிலை தான் இங்கே பரிதாபத்துக்குரியதாகின்றது. அகதிகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் எல்லைப் பாதுகாப்பைக் குலைத்து நாட்டின் பாதுகாப்புக்குக்குக் குந்தகம் விளைவிப்பவர்கள் தான் ஆளுங் கட்சியினரான லேபர் என்று சொல்லி வாக்கு வங்கியைச் சுவீகரித்துக் கொள்ள விரும்பும் எதிர்க்கட்சியினருக்கு சார்பாக இந்த விடயம் அமைந்து விட்டது.**

ஒரு வாரகாலம் முடிவதற்குள் சட்டத்தினால் வழங்கப்பட்ட உரிமைக்கெதிராக மறுப்புச்சட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றமை இந்தப் பிரச்சினை எத்தனை ஆழமாகப் புரையோடி இருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது. விடுவிக்கப்பட்டவர்கள் மீளத் தடுத்து வைக்கப்படலாம் என்ற முன்பாதுகாப்புக்குரிய சட்டமொன்றே இப்போது முன்வைக்கப்பட்டிருக்கின்றது. கடுங்குற்றம் இழைத்தவர்களை மீளத் தடுப்பில் வைப்பதற்கான சட்டமொன்று இயற்றப்பட வேண்டும் என்பதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் நாட்டில் சட்டமும் அமைதியும் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்ட பலரும் ஒருமித்த கருத்தைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள்.

கடுங்குற்றங்களை இழைத்தவர்கள் ஏதோவொரு சந்தர்ப்ப வசத்தால் அக்குற்றச்செயல்களில் ஈடுபட்டிருக்கக் கூடும். குற்றத்தரவுகளின் படி ஒரு தடவை குற்றமிழைத்தவர்கள் மீளவும் குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு அதிகம் என்றே கூறப்பட்டாலும் இத்தனை காலத் தடுப்புக்காவல் வாழ்வில் மனந்திருந்தி நல்லவர்கள் ஆகியிருக்கவும் கூடும்.

நாட்டின் பலபகுதியிலும் குற்றம் இழைத்தவர்கள் பிணையில் விடுவிக்கப்படுவதும், அவர்கள் மீளக்குற்றங்களில் ஈடுபடுவதும் பொதுவான நிகழ்வாக இருந்தாலும் அதைப் பற்றி யாரும் கருத்தில் கொள்வதாகவோ, பெரிதாக அலட்டிக் கொள்வதாகவோ தெரியவில்லை. விக்டோரிய மாநிலத்தை எடுத்துக் கொண்டால் ஒரு வாரத்தில் 500 பேராவது சிறைத் தண்டனை பெறும் வகையிலான குற்றங்களைச் செய்கின்றார்கள் என்று கூறப்படுகின்றது. பிணையில் விடுவிக்கப்பட்ட 440 பதின்ம வயதினரால் மொத்தமாக 2052 தடவைகள் மீளக்குற்றம் இழைக்கப்பட்டுள்ளதாக பதிவேடுகளின் தரவு சொல்கின்றது. பிணையில் விடுவிக்கப்பட்ட 44 வயதான அவுஸ்திரேலியப் பிரஜை ஒருவரால் 46 வயதான முன்னாள் துணைவர் அவரின் குழந்தைகளின் கண்ணெதிரே கொல்லப்பட்டமை ஒரு சம்பவமாக மட்டுமே நோக்கப்படுகின்றது. ஆனால் குடியுரிமை இல்லாத பிற நாட்டவர் ஒருவர் பொதுமக்களுள் விடுவிக்கப்பட்டு வாழும் போது, அவ்வாறான பாரதூரமான குற்றச்செயலைச் செய்து விடாமல் தடுக்க வேண்டியதும் அரசாங்கத்தின் கடமையாகின்றது. அதனால் தான் தடுப்புக்கைதிகளின் விடுதலைக்கு அத்தனை முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

ஒரு நாட்டின் பிரதம மந்திரிக்கு மெய்ப்பாதுகாப்பாளராக இருந்த ஒருவர், கர்ப்பிணிப்பெண் ஒருவரைச் சுட்டுக் கொன்று விட்டு இந்த நாட்டின் அடைக்கலம் தேடி வந்திருக்கின்றார். தனக்கு மேலிடத்திலிருந்து இடப்பட்ட உத்தரவுக்கு ஏற்பவே தான் அச்செயலைச் செய்ததாகச் சொல்வதும், அவர் யாரென்பதைச் சொல்ல மறுப்பதும் அடைக்கலம் கோருபவரின் கதையாக இருக்கின்றது. அவர் செய்த கொடூரக்குற்றத்துக்கு மரணதண்டனை வழங்கப்பட்ட போது, அவர் தண்டனை பெறாமல் தப்பித்திருப்பது அந்த நாட்டின் நீதியைக் கேள்விக்குறியாக்கி விடாதா? இந்தக் குற்றவாளிகளுக்கு அடைக்கலம் வழங்குமாறு அரசாங்கம் வேறு நாடுகளைக் கேட்டுக் கொண்டிருப்பது இன்னமும் நகைப்புக்கிடமாக இருக்கின்றது. பத்து வயதுச் சிறுமி ஒருவரைப் பாலியல் துர்ப்பிரயோகம் செய்த வழக்கு இன்னொருவருடையது. ஆபிரிக்க நாடொன்றில் இளவயது போராளியாக இருந்த ஒருவர் அடைக்கலம் கோரிக் காத்திருந்த பதினைந்து ஆண்டுகளுக்குள் பல குற்றங்களை மீண்டும் மீண்டும் இழைத்திருப்பதைக் கருத்தில் கொள்ளாமல் அவரை விடுவித்திருப்பது நாட்டு மக்களின் பாதுகாப்புக்கு குந்தகமாகி விடுமல்லவா?

ஆனால் அதே தடுப்புக்காவலில் இருக்கும் இன்னும் சிலர் குற்றப்பதிவுகள் எதுவுமின்றி பாதுகாப்பான வாழ்க்கையைத் தேடி மட்டுமே அகதி அந்தஸ்து கேட்டுக் காத்திருக்கின்றார்கள். அவர்களையும், மேற்குறிப்பிட்ட தீவிர குற்றவாளிகளையும் ஒரே தட்டில் வைத்து நீதி வழங்க வேண்டும் என்று சிலர் வாதிடுவதில் எந்த அர்த்தமுமே இல்லை. வாழ வழி தேடுபவர்களைக் குற்றம் செய்தவர்கள் போல் வெளியுலகுக்குச் சித்திரித்துக் காட்டுவது வாழ்வதற்கான வழியை முடக்கும் செயலாகும். பாரபட்சமின்றி ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட நிலைமைக்கேற்ப சட்டம்தான் நீதி வழங்க வேண்டுமே தவிர, தம் அரசியல் இலாபங்களுக்காக ஆதாயம் விளைவிக்கத் தேட முயலும் அரசியல்வாதிகளின் கைகளில் நீதிதேவதையை ஒப்படைத்து விடக் கூடாது என்பதே எல்லோருடைய நியாயமான எதிர்பார்ப்பாகும்.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284



# சட்டத்துறை அதிகாரத்தை “பிக்பொக்கட்” அடிக்க முயல்கிறாரா ரணில்?

சா. ஹரிகரன்

இலங்கையின் நிறைவேற்று அதிகாரக் கதிரை என்பது எவ்வளவு அதிகார போதை மிக்கது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் ஆற்றும் உரைகளினூடாக அவதானிக்க முடிகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் குறிப்பிட்டதன் படி 1996 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய மாநாட்டில் நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்பட வேண்டும் எனகூறிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அதிர்ஷ்டத்தால் மக்களாணை இன்றி ஜனாதிபதியாகி தனது அதிகாரம் குறித்து கொண்டிருக்கும் நிலைப்பாடு நேரெதிர்ப்போக்காகவே உள்ளது.

இதுவரை காலமாகவும் கோட் அணிந்து தன்னை மேற்கத்தேய முதலாளித்துவவாதியாகவும், ஜனநாயக வாதியாகவும் காட்டிக்கொண்டு ஜனநாயகத்தின் ஏணியைப் பிடித்து உச்சத்துக்கு வந்த ஜனாதிபதி அண்மைக்காலமாக அந்த ஜன நயகத்திற்கு விரோதமான செயல்களுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற அல்லது அவற்றை கண்டும் காணாமல் அனுமதிக்கின்ற ஒருவராக காணப்படுகின்றமை அவர் அதிகார போதையின் நாயகனாக மாறி விட்டாரா என்ற கேள்வியை எழுப்புகின்றது.

பயங்கரவாத சட்ட ஏற்பாடுகளை கொண்டு வந்து அரசாங்கத்திற்கு எதிராகப் போராடுபவர்கள் மீது பயங்கரவாத முலாத்தை பூசமுற்படுதல், நிகழ் நிலை சட்ட ஏற்பாடுகளை கொண்டு வந்து மக்களின் கருத்துரிமை, பேச்சுரிமை,சிந்திக்கும் உரிமை என்பனவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்துதல் போன்ற ஆபத்தான, ஜனநாயகத்திற்கும் சட்ட ஆட்சிக்கும் முரணான செயல்கள் இடம்பெற அனுமதித்தல் அதுவும் அவரின் ஆட்சிக் காலத்தில் இடம்பெறுதல் சர்வதேச அளவில் அவரின் அதிகார போதையை அடையாளப்படுத்துவதாகவே அமைகின்றது.

இதற்கு மேலதிகமாக இலங்கையில் நீதிபதிகள் மற்றும் ஆணைக்குழுக்கள் ஆகிய சுயாதீன நியமனங்கள் மீது நிறைவேற்றதிகாரத்தின் சாயல் இருக்க கூடாது என்ற காரணத்துக்காக 21 ஆம் திருத்தம் மூலம் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்புப் பேரவையை நிறைவேற்றதிகாரத்தின் ஒரு பிரிவாக காட்டி நாடாளுமன்றில் உரையாற்றுதல் அத்தகைய அதிகாரங்களையும் பிக்பொக்கட் அடிக்க முற்படும் செயலாகவே பார்க்க முடிகின்றது.

ஏற்கனவே அவரின் அரசாங்கமானது நீதிமன்ற உத்தரவுகளை மீறி மக்களின் ஜனநாயக உரிமையான மக்கள் இறைமையை தேர்தல்களைநடாத்தஅனுமதியாது பிக்பொக்கட்அடித்திருந்தது. அத்துடன் திறைசேரியினை பயன்படுத்தி நாடாளுமன்றுக்கு இருக்கும் நிதிக்கட்டுப்பாட்டு அதிகாரத்தையும் பிக்பொக்கட் அடித்திருந்த குற்றச்சாட்டுகள் ஜனாதிபதி மீதும் அவர் சார்ந்த நிறைவேற்றுத்துறை கட்டமைப்புகள் மீதும் சுமத்தப் பட்டிருந்தன. தற்போது அதற்கு மேலதிகமாக சட்டத்துறையின் வசமிருக்கும் அரசியலமைப்பு பேரவையை நிறைவேற்றுத் துறையின் உடலாக அடையாளப்படுத்தி உரையாற்ற முற்படுவதன் ஊடாக அதையும் பிக்பொக்கட் அடித்து வலுவேற்றாக்கம் , சமனிலைத் தலையீடு என்பவற்றை இல்லாமலாக்க முயல்கிறாரா என்ற இயல்பான சந்தேகம் அனைவர் மத்தியிலும் எழுகின்றது. அண்மையில் பொலிஸ்மா அதிபர் நியமன விடயத்தில் எழுந்திருக்கும் நெருக்கடி நிலைமையானது திட்டமிட்டு நிறைவேற்று அதிகாரம் தனக்கு சார்பான ஒரு வரை நியமித்து, அதிகார மேலாண்மையை உறுதிப்படுத்த முற்படுகின்றதா என்ற இயல்பான சந்தேகத்தை தவிர்க்க முடியாமல் எழுப்புகின்றது.

இலங்கையின் 1978 ஆம் ஆண்டு மூல யாப்பில் நிறைவேற்றுத் துறையின் கைவசமே நியமன அதிகாரங்கள் கொட்டி கிடந்தன. அது இந்த நாட்டில் தனி ஒரு மனிதன் இரும்பு மனிதனாக மாறுவதற்கான வாய்ப்பையே ஏற்படுத்தியது. தனக்குச் சார்பானவர்களை பதவியில் நியமித்து அரசியல் தலையீட்டுடனான பொது நிர்வாக முறைமைக்கு இது வழிகோலியது. அதற்கு மேலும் ஆளும் தரப்பு மக்களின் ஜ நாயக உரித்தை எந்த வித மட்டுப்பாடுகளும் இன்றி தொடரும் ஏது நிலையை ஏற்படுத்தி இருந்தது.

ஆனால் அரசியலமைப்பின் 17 ஆம் திருத்தம் கொண்டுவரப் பட்டு நிறைவேற்றுத் துறையின் நியமன அதிகாரங்கள் மீது தடைச்சமனிலை ஏற்படுத்தும் அரசியலமைப்பு பேரவை உருவாக்கம் நிகழ்ந்தது. இதன் பின் 18 ஆம் திருத்தம் நாடாளுமன்றப்பேரவையை உருவாக்கி சமனிலைத் தலையீட்டைக் குறைமதிப்புக்கு உட்படுத்தியது. ஆனாலும் 19 ஆம் திருத்தம் ,21 ஆம் திருத்தம் என்பன அரசியலமைப்பு பேரவையை ஸ்தாபித்து ஜனநாயகத்தை ஓரளவுக்கேனும் பாதுகாக்க முற்பட்டன. குறிப்பாக ஆணைக்குழுக்களான மனித உரிமை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு , பொதுச்சேவை ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு , எல்லை நிர்ணய ஆணைக்குழு போன்ற ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தை மேற்குறித்த ஏற்பாடுகள் ஓரளவுக்கேனும் பாதுகாத்தன.

ஆனால் தற்போதய ஜனாதிபதி அதனை நிறைவேற்று அதிகாரத்தின் உடல் என வரையறுக்க முற்படுகின்றமையும் அது தொடர்பான தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க பரிந்துரை செய்வதும் ஆபத்தான ஜனநாயகப்போக்காகவே அடையாளப்படுத்த முடிகின்றது.

அரசியலமைப்பு சட்டம் குறித்த ஆழமான புரிதலின்றியோ / அது தொடர்பில் தெரிந்தும் தன்னுடைய நிறைவேற்று அதிகாரத் தீர்மானத்தை திணிக்கும் நோக்கம் கருதியோ ஜனாதிபதி செயற்படுகின்றார் என்ற இயல்பான சந்தேகங்கள் அரசியலமைப்பு சார் ஆய்வாளர்களிடம் ஏற்படுகின்றன.

குறிப்பாக அரசியலமைப்பு பேரவை என்பது சட்டத் துறையின் மிக முக்கியமான கட்டமைப்பாகும்.

இது பற்றி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பு சட்டத்தின் 41.அ. (1) பின்வருமாறு குறிப்பிடுகின்றது. அதில் அங்கத்துவம் வகிக்கின்ற உறுப்பினர்களையும் அதன் தலைமைப்பொறுப்பையும் அது தெளிவாகவே வரையறுக்கின்றது.

அதன் படி ,

(அ) பிரதம அமைச்சர்

(ஆ) சபாநாயகர்:

(இ) நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர்

(ஈ) ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்:

(உ) பின்வருமாறாக பெயர்குறிக்கப்பட்டதன் மேல், ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து ஆட்கள் என குறிப்பிடுகின்றது அந்த உறுப்பினர்களாக

(i) அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் உடன்பாட்டின் மீது பெயர்குறிக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினரொருவர்:

(ii) எந்த அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக் குழுவை எதிர்க்கட்சித் தலைவர் சேர்ந்துள்ளாரோ அந்த அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் உடன்பாட்டின் மீது பெயர் குறிக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினரொருவர் மற்றும்

(iii) பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவருடனான உடன்பாட்டின் மீது சாபநாயகரினால் பெயர்குறிக்கப்படும் மூன்று ஆட்கள் என குறிப்பிடுகின்றது.

இதற்கு மேலதிகமாக (C) என்ற உறுப்புரையானது பின்வருமாறு குறிப்பிடுகின்றது

(C) அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் எந்த அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக் குழுவை எதிர்க்கட்சித் தலைவர் சேர்ந்துள்ளாரோ அந்த அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தவிர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்

-எனத் தெரிவிக்கின்றது.

மேற்குறித்த ஏற்பாடுகளின் கீழ் சிறுபான்மைச் சமூகம் எனும் நிபந்தனையின் கீழ் தமிழ் தேசிய கூட்டமைப்பினால் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் பெயர் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. ஆனால் இக்கட்டுரை எழுதப்படும் வரை இவ்விடயத்தை ஜனாதிபதி சர்ச்சைக்கு உட்படுத்தி செயற்படுவது ஆபத்தான ஒன்றாகவே காணப்படுகின்றது. ஏனெனில் மேற்குறித்த ( உ) மற்றும் (ஊ) ஆகிய ஏற்பாடுகளின் உறுதிப்படுத்தலை அரசியலமைப்பு சட்டமானது சபாநாயகரிடமே சுமத்தியுள்ளது. அத்துடன் அரசியலமைப்பு பேரவையின் தலைவராகவும் சபாநாயகரே அரசியலமைப்பு நியமிக்கின்றது. ஆனால் ஜனாதிபதி அதற்கு முரணாக நாடாளுமன்றத்தில் ஆற்றும் உரைகள் நிறைவேற்று அதிகாரத்தை வைத்து சட்டத்துறையின் பொறுப்பை பிக்பொக்கட் அடிக்க முயலும் செயற்பாடாகவே நோக்க முடிகின்றது.

எனவே இலங்கையின் ஆட்சியாளர்களின் மன நிலை என்பது அதிகாரக் குவிப்பை நோக்கி செல்லும் துரதிர்ஷ்டமான பயணத்தில் இப்போதைய ஜனாதிபதியும் இணைந்துள்ளாரா என சந்தேகிக்க முடிகின்றது.

# இத்தனை அச்சுறுத்தல்கள்... கைதுகள்... விசாரணைகள்..!

தமிழ்த்தேசிய எழுச்சி நாளான மாவீரர் நாள் பேரெழுச்சியுடன் நிறைவடைந்திருக்கின்றது. கடந்த வருடத்தை விடவும் இவ்வருடம் மாவீரர் தினத்திற்காக திரண்ட மக்கள் தொகை மிக அதிகம். குடும்பம் குடும்பமாகக் குழுமி வந்து மாவீரர் துயிலுமில்லங்களை மக்கள் முழுமைப்படுத்தினர். மிகுந்த உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டனர். வழமையான துயிலுமில்லங்களுக்கு அப்பால், தமிழீழ விடுதலைப்புலிகள் மாவீரர்கள் நினைவாக எங்கெல்லாம் நினைவுத் தூபிகளை அமைந்திருந்தார்களோ, அவ்விடங்களையெல்லாம் சீரமைத்து, அங்கேயும் வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன. இதற்கு சற்றும் சளைக்காத வகையில் இலங்கை அரச படைகளும், பொலிஸாரும், புலனாய்வாளர்களும் களத்தில் செயற்பட்டனர். மாவீரர் வாரம் தொடங்கிய நாள் தொட்டே கண்காணிப்புகளும், விசாரணைகளும், கைதுகளும், மாவீரர் துயிலுமில்ல சிதைப்புக்களும் ஆரம்பமாகியிருந்தன.


வன்னிவிளாங்குளம் துயிலுமிலம்

### வழக்குகள்

மாவீரர் வாரமானது நவம்பர் 21 ஆம் திகதி ஆரம்பமாகும் முன்னரே, பொலிஸார் நீதிமன்றங்களை நாடியிருந்தனர். அதாவது பயங்கரவாதிகளை நினைவுகூர சட்டத்தில் இடமில்லை என்றவாறான வாதங்களை முன்வைத்து வழக்குகளைத் தொடர்ந்தனர். வடக்கு, கிழக்கில் உள்ள பெரும்பாலான நீதிமன்றங்கள், நினைவேந்தல் உரிமையை சுட்டிக்காட்டி, பொலிஸார் தொடர்ந்த வழக்குகளைத் தள்ளுபடி செய்துவிட்டன. முல்லைத்தீவில் இரவில் கூட பொலிஸார் நீதிமன்றத்தை நாடியிருந்தனர். அப்போதும் நீதிமன்றம் பகலில் சொன்னதையே சொன்னது. எனவே புலிகளின்


கொடிகாமம் துயிலுமில்லம்

அடையாளங்களை வைத்து நினைவேந்தல் செய்ய முடியாது என்கிற கோசத்தோடு மாவீரர் துயிலுமில்லங்களுக்கு வந்தனர் பொலிஸார். அதன்படி சிவப்பு, மஞ்சள் கொடிகள், கார்த்திகைப் பூ போன்றனவெல்லாம் பயங்கரவாத அடையாளங்களாகப் பொலிஸாரின் கண்களுக்கு மாறியிருந்தன. முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்துக்கு வருகைதந்த பொலிஸார், அங்கு வரையப்பட்டிருந்த கார்த்திகைப் பூ பயங்கரவாதம் எனத் தெரிவித்து முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுடன் மணிக்கணக்கில் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ரவிகரன் அவ்வாறு பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டமைக்காக அன்றைய தினம் மாலை 3 மணிநேரம் தனியாக அழைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார். அதேபோல மாவீரர் தினத்தன்று, அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்துக்குள் நுழைந்த பொலிஸார் அங்கு கட்டப்பட்டிருந்த சிவப்பு மஞ்சள் கொடிகளை அறுத்தெறிந்தனர்.

### மாவீரர் துயிலுமில்ல சிதைப்புகள்

வழக்குகளில் தோற்றுப்போன பொலிஸாரும், புலனாய்வாளர்களும் தங்களின் வழமையான வேலைகளில் இறங்கினர். நேரடியாகவும், மறைமுகமாகவும் மாவீரர் துயிலுமில்லங்கள், நினைவிடங்களை சிதைக்கும் கைங்கரியத்தைக் கையிலெடுத்தனர்.

இறுதிப்போர்வேளையில் வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களுக்கான துயிலுமில்லமொன்று முல்லைத்தீவின், தேவிபுரம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது. அதனை நினைவுவைத்திருந்த மக்கள் இம்முறை அவ்விடத்தில் தற்காலிக நினைவுத்தூபியொன்றினை அமைத்து நினைவேந்தலை நடத்தத் திட்டமிட்டிருந்தனர். அதன்படி மாவீரர் வாரம் ஆரம்பித்தவுடன் 21 ஆம் திகதி காலை சிரமதானம் மூலம் அப்பகுதியை சீர்படுத்தி, தற்காலிக தூபியொன்றை அமைத்தனர். அன்றிரவு அவ்விடத்திற்கு வருகைதந்த இனந்தெரியாதநபர்கள் நினைவுத்தூபியை அடித்து நொருக்கிச் சென்றனர்.

23 ஆம் திகதி மட்டக்களப்பின் வாழைச்சேனைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் நினைவுத்தூபியைப் பலரும் பார்த்திருக்க பொலிஸார் அடித்து நொருக்கினர். பழைய துயிலுமில்லத்தை இராணுவம் ஏற்கனவே அழித்திருந்தது. அவ்வாறு அழிக்கப்பட்டவையிலிருந்து எஞ்சிய கற்களைக் கொண்டு மீண்டும் அமைக்கப்பட்ட நினைவுத்தூபியையே பொலிஸார் அழித்தனர்.


மல்லாவி ஆலங்குளம் துயிலுமில்லம்


மன்னார் பண்டிவிரிச்சான் துயிலுமில்லம்


கோப்பாய் துயிலுமில்லம்

கிழக்கு மாகாணத்தின் பெரிய துயிலுமில்லங்களில் ஒன்றான வாகரை துயிலுமில்லத்தை பிரதேச மக்கள் சீரமைத்த பின்னர் அப்பகுதிக்குள் நுழைந்த பொலிஸார் அதனை உடைத்தெறிந்தனர். அதனைத் தடுக்க முனைந்த மக்களை அச்சுறுத்திச்சென்றனர்.

### விசாரணைகள்

அதேபோல வடமராட்சி கிழக்கு உடுத்துறை பகுதியில் துயிலுமில்ல சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களை பொலிஸார் புகைப்படமெடுத்து கண்காணித்ததோடு, அவ்விடத்தில் நின்ற பொதுமக்கள் நால்வரின் தனிப்பட்ட விபரங்களையும் பெற்றுச்சென்றனர்.



மல்லாவி ஆலங்குளம் துயிலுமில்லம்

மட்டக்களப்பின் தாண்டியடி மாவீரர் துயிலுமில்லப் பகுதியில் இடம்பெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வொன்றுக்குள் நுழைந்த பொலிஸார், அந்நிகழ்வை குழப்பும் வகையில் விசாரணைகளில் ஈடுபட்டதோடு, நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

### கைதுகள்

அதேபோல மட்டக்களப்பின் வெள்ளாவெளி பகுதியில் மாவீரர் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வொன்றினை நடத்திக்கொண்டிருந்த ஜனநாயக மக்கள் கட்சியின் தலைவர் என். நகுலேஸ் நிகழ்ச்சியின் இடையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

மாவீரர் தின ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் க.குகானந்தராசா தாண்டியடி துயிலுமில்லப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அம்பாறை, கஞ்சிகுடிச்சாறு பகுதியில் உள்ள துயிலுமில்லத்தை சீர்படுத்த சென்ற 35 இற்கும் மேற்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டதோடு, அவர்களைப் பார்வையிடச் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் பொலிஸாரினால் திருப்பியனுப்பப்பட்டார்.

மட்டக்களப்பின் தரவை துயிலுமில்லத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் அப்பகுதிக்குள் நுழைந்த பொலிஸார் அங்கு கட்டப்பட்டிருந்த சிவப்பு, மஞ்சள் கொடிகளை அறுத்து வீசினர். தொடர்ந்து அங்கு நின்றிருந்த 07 பேரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து அழைத்துச் சென்றனர். அதில் ஒருவர் இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்.. இன்னமும் விடுதலை செய்யப்படாது தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இவர்களை எதிர்வரும் இருதினங்களுக்குள் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில், விடுதலைப்புலிகளால் படுகொலை செய்யப்பட்டவர்கள் எனக்கோரி ஒரு தொகையினரின் படங்களை


மணலாறு கோடாலிக்கல் துயிலுமில்லம்

வைத்துக் கண்காட்சி நடத்திக்கொண்டிருந்தவர்களை யாரென விசாரித்த குற்றத்திற்காக முன்னாள் போராளியும், அரசியல் கைதியுமான அரவிந்தன் கைதுசெய்யப்பட்டு இரு தினங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

### மாவீரர் தினத்துக்குப் பின்னரான கைதுகள்

யாழ்ப்பாணத்தில், மாவீரர் தினத்தன்று, தனது ஆடையில் விடுதலைப்புலிகளின் இலச்சினையையும், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் படத்தையும் அச்சேற்றி அணிந்தமைக்கான இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

அதேபோல கோப்பாய் துயிலுமில்லத்திற்கு தம் பிள்ளைகளுக்கு


முல்லைத்தீவு இரணைப்பாலை துயிலுமில்லம்

பெண் போராளிகளைப்போல வேடமணிந்து அழைத்து வந்த பெற்றோர் குறித்த விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவர்களையும் கைதுசெய்ய வேண்டும் என சிங்களக் கடும்போக்காளர்களும், சிங்கள ஊடகங்களும் எழுதிவருகின்றன.

இவ்வளவு அச்சுறுத்தல்களுக்கும், கைதுகளுக்கும் மத்தியில்தான் இம்முறை மாவீரர் தினம் பேரெழுச்சியாக நிறைவடைந்துள்ளது.


வவுனியா ஈச்சங்குளம் துயிலுமில்லம்

இந்தக் கெடுபிடிகள், அச்சுறுத்தல்கள் எல்லாம் தமிழர்கள் பார்க்காதவை அல்ல. அனுபவிக்காதவை அல்ல. ஒருவகையில் இவ்வகையான அச்சுறுத்தல்கள்தான் மக்களை மாவீரர் தினம் மீதான பற்றுதலை அதிகப்படுத்துகின்றன.

### தவிர்த்திருக்க வேண்டிய விடயம்

இதில் தவிர்த்திருக்க வேண்டியது ஒரே ஒரு விடயம்தான். கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திற்கு பெண் போராளிகள் வேடமணிந்து சிறுவர்களை அழைத்து வருவதைத் தவிர்த்திருக்கலாம். பொதுவாக நாம் நம் வீட்டுக் குழந்தைகளுக்கு நமக்கு எதிரான அரச ஒடுக்குமுறைகள் குறித்தோ, தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் குறித்தோ, அவர்களின் தியாகங்கள் குறித்தோ சொல்லிக்கொடுப்பதில்லை. பிள்ளைகள் அவற்றைக் கேட்டாலும் பயத்தின் காரணமாக எதனையும் சொல்வதில்லை. வரலாற்றினைக் கடத்துவதில்லை. அண்மைக்காலமாக மெல்லமெல்லமாக அந்த மனநிலையில் மாற்றம் நிகழ்கிறது. முள்ளிவாய்க்கால் நினைவுதினம், மாவீரர் தினம் போன்றவற்றுக்கு பெற்றார் சிலர் தங்கள் பிள்ளைகளை அழைத்து வருகின்றனர். கடந்த காலத்தைக் கற்றுக்கொடுக்கின்றனர். இவ்வேளையில், கோப்பாய்க்கு பெண் போராளிகள் வேடமணிந்து வந்த சிறுவர்களின் பெற்றார் மீது நடத்தப்படும் விசாரணை, கடந்தகால வரலாற்றைத் தம் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்கத் தயாராகிய பெற்றோருக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். இவற்றிலிருந்து ஒதுங்கிக்கொள்ள சிந்திக்க வைக்கும். ஆகவே ஒடுக்குமுறைக்குள்ளான இனமொன்று, ஒடுக்குமுறைக்குள்ளிருந்துகொண்டே தனக்கு நடந்திருக்கும் ஒடுக்குமுறைகளை சந்ததி கடத்தும் வழிமுறைகள் குறித்து அக்கறையோடும், அவதானத்தோடும் செயற்படுவது அவசியமானதாகும்.


முல்லைத்தீவு இரணைப்பாலை துயிலுமில்லம்

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI
மார்கழி 2023

# பார்த்த ஞாபகம்

● தமிழ்க்கவி

அந்தக்காலத்தில் எல்லோருக்கும் இருந்த ஒரு பெரிய ஆசை, தலைவரை ஒரு தடவையாவது பார்த்துவிட வேண்டும் என்பது தான். எனக்கு அந்த ஆசை நினைக்காத போது தானாக நிறைவேறியது. அது ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்றில். அப்போது நான் போராளியாகக்கூட இல்லை. அவரது குடும்பத்தின்மீது இராணுவத்தின் கண் விழுந்திருந்த தால் அவர்களை மிக ரகசியமாக எங்கோ வைத்திருப்பதாக எல்லோரும் பேசிக் கொண்டார்கள். எனக்குத் தெரிந்த ஒரு பொறுப்பாளர் சொல்வார் "உலகத்திலுள்ள குழந்தைகளைப்போல நாலு பக்கமும் சென்றுவரவும் பல மக்கள் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடவும் அவர்களுக்கு முடியாது. பாதுகாப்பு என்ற பெயரில் அவர்கள்கட்டிப்போடப்பட்டிருந்தார்கள் "

அதன்பின் அவர்கள் யாழ்ப்பாணத்தின் பிரபலமான பாடசாலையொன்றில் படித்து வந்தார்கள் என அறிந்தேன். எனினும் வகுப்புகள் மேலேமேலே செல்லச்செல்ல அவர்கள் வெளியே வராமல் பரீட்சை எழுத மட்டும் போக வேண்டிய சூழல் வந்தது. மக்களுக்கே தெரியும் பாடசாலை முழுதுமாக சுற்றி வளைக்கப்பட்டிருந்தால் முக்கியஸ்தரின் பிள்ளைகள் பரீட்சை எழுதுகிறார்கள் என்று.

ஆனால் ஒரு அதிர்ஸ்டலாபச் சீட்டு விழுந்தமாதிரி எனக்கு அந்தப் பிள்ளைகளைக் காணும் வாய்ப்பு கிடைத்தது, காந்தரூபன் அறிவுச்சோலையில் ஒருநாள். ஒரு சிறப்பு நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருந்தேன். அங்கே முதல் முதலாக அந்தச்சிறுமியையும் அவள் அண்ணனையும் பார்த்தேன். தாயை அச்சில் வார்த்தது போல அவ்வளவு அழகு. அவர்கள் யாருடனும் பேச அனுமதியில்லை. அந்தப் பையன் தூங்குவதையே தொழிலாக வைத்திருந்தான் என அறிந்தேன் வயதுக்கு மீறிய தோற்றம். பொதுபொதுவென்றிருந்தான் . பொதுவாகவே பல போராளிகளின் பிள்ளைகள் அப்படி வளர்க்கப்பட்டிருந்தார்கள். நாலாம் ஆண்டு படிக்கும் போதே மீசை வரக்கூடிய உடல் வளர்ச்சி . மீசை இருக்காது. முகத்தில் குழந்தைத்தனம் இருக்கும். ஏரம்பு மாஸ்டரின் சாவீடு திலீபன் மண்டபத்தில் நடந்தது. அங்கே அவரது மகள் மதிவதனியே(தலைவரின் மனைவி) வருபவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தார். அங்கே கேணல் சங்கரின் மகள் (வெளிநாடொன்றில் படிக்கசென்றிருந்தவள்) இந்த மரணச் சடங்கிற்காக வந்திருந்தாள். ஏறக்குறைய துவாரகாவும் அவளும் ஒரே-யளவான தோற்றத்தை கொண்டிருப்பார்கள். எனக்கு குளிர்பானம் தர வந்த இருவரும் தமிழ்ப்பாட்டி எடுங்க என்று நீட்டினர். சற்றே வாடிப்போயிருந்தாள். தொடர்ந்து பேரனின் அந்தியேட்டிக்காக என்னை அழைக்க வந்தாள். ஒரே வார்த்தை "இஞ்சதான் பாட்டி செய்யிறம் வாங்க" என்றாள்.



நான் போனேன். சாதாரணமாக தமிழர் பண்பாட்டுக்கமைய ஒவ்வொரு இலைக்கும் சென்று இது வைக்கவா, அது போதுமா இன்னும் கொஞ்சம் எடுங்க, என்று நேரிலே உபசரித்த பண்பு தேனினும் இனிய குரல் பேச்சே சங்கீதம் போல இருந்தது. நிலமதிராத நடை. குரல் அதிராத பேச்சு. இதுதான் துவாரகா. அதன் பிறகும் ஒரு பரதநாட்டிய அரங்கேற்றத்திற்கும் தாயும் மகளுமாக வந்திருந்தார்கள். பக்கத்து வரிசையில் இருந்தேன். மெல்லிய பூங்கொடி போன்ற உடலுடன் அன்று ஒரு சிவப்பு சுடிதாரில் மிக அழகாக இருந்தாள். அதன்பின் நான் அவர்களில் பாலச்சந்திரனை மட்டும் இரண்டு மூன்று தரம் பார்த்திருக்கிறேன்

"ஒருநாள் துவாரகாவை வயிற்றில் காயத்துடன் எங்களுடைய பங்கருக்குள் கொண்டு வந்து போட்டார்கள். சற்று நேரம் கழித்து சில போராளிகள் வந்து தாங்கள் கொண்டு போகப்போவதாக கூறி தூக்கிச் சென்றார்கள்" என என்னுடன் புனர்வாழ்வு முகாமில் இருந்த சில போராளிகள் கூறியதையும் இங்கு நினைவு கூருகிறேன்.




# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கத்தினால் நடத்தப்பட்ட
# ‘தமிழ் ஊக்குவிப்பு போட்டி 2023’























## தேசிய நிலைப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றோர்



அர்ஜுன் துவாரகன்
(கவிதை மனனப் போட்டி - கீழ்ப் பிரிவு)



அக்ஷயன் பகீரதன்
(பேச்சுப் போட்டி - மத்திய பிரிவு)



சம்ஹிதா வீரமச்சான்பட்டி கல்யாணசுந்தரம்
(பேச்சுப் போட்டி - மேற் பிரிவு)



காவ்யா செல்வரூபன்
(பேச்சுப் போட்டி - அதிமேற் பிரிவு)



கேசிகன் சுதாகரன்
(எழுத்தறிவுப் போட்டி - மத்திய பிரிவு)



காருண்யா செந்த்வரன்
(விசேட எழுத்தறிவுப் போட்டி - கீழ்ப் பிரிவு)



வர்ஸ்னா ஜனந்தன்
(எழுத்தறிவுப் போட்டி - மேற் பிரிவு)



சுவாதி சுந்தரமோகன் (எழுத்தறிவுப் போட்டி - அதிமேற் பிரிவு)



அமரா ஜெயகணேஷ் (விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) - மத்திய பிரிவு)



ஆரபி திருமாவளவன் (விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) - அதிமேற் பிரிவு)

எதிரொலி

ETHIROLI

மார்கழி 2023

# இஸ்ரேல்-காசா யுத்தம்

# இந்தியா யார் பக்கம்?

● அ.பாக்கியம்

**2023** ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேல்-காசா எல்லைப் பகுதியில் ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் உலகின் சக்திவாய்ந்த இஸ்ரேல் இராணுவம் நிலைகுலைந்து போனது. உலகின் தலைசிறந்த உளவுத்துறை மொசாட் இதற்கான அறிகுறிகளைகூட அறியாமல் இருந்தது பெரும்அதிர்ச்சியாகும். இந்தத் தாக்குதலில் சுமார் 1200 பேர் இறந்ததாகத் தகவல் உள்ளது. இந்த தாக்குதலை ஒரு பயங்கரவாதத் தாக்குதலாகக் கட்டமைக்கும் முயற்சிகளை இஸ்ரேல் ஆதரவு நாடுகள், குறிப்பாக அமெரிக்கா தலைமையில் உள்ள நாடுகள் மேற்கொண்டுள்ளன.

இஸ்ரேலின் 75 ஆண்டுகால தாக்குதல்கள், சட்டவிரோத குடியேற்றங்கள், ஆக்கிரமிப்புகளை எதிர்த்து நடைபெற்ற தாக்குதல் தான் ஹமாசின் தாக்குதல். இதற்கு எதிர்வினையாக இஸ்ரேல் இராணுவம் காசா பகுதியில் மிகப் பயங்கரமான தாக்குதலை நடத்தி வருகிறது. யுத்த விதிமுறைகளை எல்லாம் மீறி பொதுமக்கள், குழந்தைகள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் என அனைத்தையும் தரைமட்டம் ஆக்கிவிட்டது. காசா பகுதியில் ஒவ்வொரு நகரும் அகதிகள் முகாமாக மாறிவிட்டன. இதுவரை 18,000 மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த யுத்தத்தில் இந்தியாவின் நிலைப்பாடு பாரம்பரியமான கொள்கைகளுக்கு எதிரான முறையில் இருக்கிறது. இஸ்ரேல் மற்றும் அமெரிக்க ஆதரவு நிலையை அப்பட்டமாக மேற்கொண்டு வருகிறது நரேந்திரமோடியின் தலைமையிலான பா.ஜ.க. அரசு. இதுவரை அணிசேரா இயக்கத்தின் தலைமையில் இருந்த இந்தியா, எப்பொழுதுமே தெற்கு உலகத்துடன் இணைந்துதான் பாலஸ்தீனத் திற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்து வந்துள்ளது.

ஒக்ரோபர் 7 தாக்குதல் நடந்து சில மணி நேரத்தில் இந்தியாவின் பிரதமர் பயங்கரவாதத்தை வலுவான மொழியில் கண்டித்ததுடன் இஸ்ரேலுடன் இருப்பதாக தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்தார். தொடர்ச்சியாக "இஸ்ரேலில் பயங்கரவாதத் தாக்குதல் செய்தியால் ஆழ்ந்த அதிர்ச்சி அடைந்தேன். எங்கள் எண்ணங்களும் பிரார்த்தனைகளும் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் உள்ளன. இந்தக் கடினமான நேரத்தில் நாங்கள் இஸ்ரேலுடன் ஒற்றுமையாக நிற்கிறோம்" என்று பிரதமர் பேசினார். நரேந்திர மோடியின் இந்த அனுதாப ஆதரவு திடீரென்று வந்தது அல்ல. இந்தியாவில் கடைப்பிடிக்கக் கூடிய வெறுப்பு அரசியலின் அடித்தளத்தில் இருந்தும், அமெரிக்க சார்பு கொள்கையில் இருந்தும் வெளிவந்தது.

இதனைத் தொடர்ந்து ஒக்ரோபர் 26 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையில் காசா பகுதியின் மீது இஸ்ரேல் நடத்தி வரும் போரை நிறுத்த வேண்டும் என்ற முறையில் தீர்மானங்கள் முன்மொழியப்பட்டன. இதுவரை கடைப்பிடித்த கொள்கைக்கு எதிராக இந்தியா தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்காமல் வெளியேறியது. 120 நாடுகள், குறிப்பாக தெற்குலகநாடுகள், மேற்குஆசியா, தெற்கு ஆசியாவின் அனைத்து நாடுகளும், தென்கிழக்கு ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய நாடுகள் அனைத்தும் 'போர் நிறுத்தம் வேண்டும் ' என்பதற்கு ஆதரவாக வாக்களித்தன.

இந்தியா போர்நிறுத்தத்திற்கு எதிராக இஸ்ரேலுக்கு ஆதரவாக நிலை எடுத்தது மிகப்பெரிய அவமானம் ஆகும். இந்தியா சில நாட்கள் கழித்து இதற்கு கொடுத்த விளக்கம் வினோதமாக இருந்தது. அடுத்தடுத்த தீர்மானத்தை இந்தியாவால் எதிர்க்க முடியாத சூழல் ஏற்பட்டது. எனவே முதல் தீர்மானத்திற்கு விளக்கத்தை தானாக முன்வந்து அளித்தது.

ஏழாம் திகதி நடைபெற்ற ஹமாஸ் அமைப்பின் தாக்குதல் பற்றி வெளிப்படையான குறிப்பு எதுவும் இல்லாததால் அந்த தீர்மானத்திற்கு வாக்களிக்கவில்லை என்று ஒரு சொத்தை காரணத்தை கூறினார்கள். பாலஸ்தீனர்களுக்கான ஐ.நா.வின் நிவாரண மற்றும் பணிகள் தொடர்பான அமைப்பு, பாலஸ்தீன அகதிகளுக்கு உதவி செய்வது, பாலஸ்தீன அகதிகளின் சொத்துப் பிரச்சினை, இஸ்ரேல் ஆக்கிரமித்த கோலோன் குன்று பகுதி, பாலஸ்தீன்களுக்கு சொந்தமான கிழக்கு ஜெருசலேமில் யூதர்களை குடியேற்றுவது போன்ற தீர்மானங்கள் ஐ.நா. சபையில் கொண்டு வந்த பொழுது இந்தியா அவற்றை ஆதரித்தது.

ஒக்ரோபர் 26 ஆம் திகதி கொண்டுவரப்பட்ட போர் நிறுத்த தீர்மானத்தில் இந்தியா எந்தவிதத் திருத்தமும் கொடுக்கவில்லை. தீவிரவாதத் தாக்குதல் பற்றி இந்தத் தீர்மானத்தில் வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை என்பதற்காக வாக்களிக்காத இந்தியா, அடுத்து வாக்களித்த ஐந்து தீர்மானங்களிலும் மேற்கண்ட தீவிரவாதத் தாக்குதல் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. பிறகு இதற்கு மட்டும் ஏன் வாக்களிக்க வேண்டும்? இந்தியா கொடுத்தது பொருத்தப்பாடற்ற விளக்கமாக இருந்தது.



மேற்கண்ட 5 தீர்மானங்களையும் நிராகரிக்க வேண்டும் என்று இஸ்ரேல் நாட்டின் தூதுவர் ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் இதர நாட்டுத் தூதுவர்களை பகிரங்கமாகக் கேட்டுக் கொண்டார். காரணம் இஸ்ரேலின் இன்றைய நிலைமை பற்றி அதில் எந்தக் குறிப்பும் இல்லை என்று தெரிவித்தார். உடனடியாக கியூபா நாட்டின் தூதுவர் தலையிட்டு பாலஸ்தீனத்திலும் 4000 குழந்தைகள் உட்பட 11 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டு 10 லட்சம் பேர் வரை இடம்பெயர்வு செய்துள்ளனர். இது பற்றியும் எந்தக் குறிப்பு இல்லை.இதைக் காரணமாகக் கூறி தீர்மானத்தை தடுக்க கூடாது. ஆகவே தீர்மானத்தை அனைவரும் ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என்று பேசினார். இந்த தீர்மானத்திலும் இந்தியா எந்தவித திருத்தங்களையும் கொடுக்கவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையில் 15 நாடுகளை உள்ளடக்கிய பாதுகாப்புக் கவுன்சில் உள்ளது. இவற்றில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் சிறப்பு ரத்து அதிகாரம் கொண்ட நிரந்தர உறுப்புரிமை கொண்டவை. மற்ற பத்து நாடுகள், அல்பேனியா, பிரேசில், ஈக்குவடார், கோபன், கானா, ஜப்பான், மால்டா, மொசாம்பிக்,, சுவிட்சர்லாந்து ஐக்கியஅரபுஎமிரேட்ஸ் ஆகும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த பத்து நாடுகளும் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படும். இந்தப் பாதுகாப்புக் குழு கூட்டத்தில் அமெரிக்கா ஒரு தீர்மானத்தை முன்மொழிகிறது. அதில் ஹமாஸ் தாக்குதலைக் கண்டித்தும், தற்காலிகத் தாக்குதல் நிறுத்தம் (pause) மனிதாபிமான உதவி என்று குறிப்பிட்டு முன்மொழிகிறது. இந்தத் தீர்மானம் ஹமாஸ் விடுதலைக்காகப் போராடக்கூடிய அமைப்பு அல்ல என்பதையும், இஸ்ரேலின் தாக்குதல் தொடர்வதற்கான முறையில் சட்டபூர்வமான ஒப்புதலை பெறக்கூடிய முறையில் உள்ளார்ந்த விஷயங்களையும் உள்ளடக்கி இருந்தது. எனவே சீனா, ரஷ்யா தமது ரத்து அதிகாரத்தை பயன்படுத்தி தீர்மானத்தை தோற்கடித்தன.

ரஷ்யா மனிதாபிமான உதவி, நிரந்தரப் போர் நிறுத்தம் என்ற வரிகளுடன் தீர்மானத்தை முன்மொழிந்தது. அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் இதர நாடுகளை இணைத்து தீர்மானத்தை ஏற்க விடாமல் தடுத்தது. பிரேசில் நிரந்தர போர் நிறுத்தம் அல்லது தற்காலிக நிறுத்தம் என்ற விஷயங்களைத் தவிர்த்து, மனிதாபிமான உதவியை உடனடியாக வழங்க வேண்டும் என்று தீர்மானத்தை முன்மொழிந்ததை ரஷ்யா, சீனா உட்பட பெரும்பாலான நாடுகள் ஆதரித்தன. எங்கே தீர்மானம் நிறைவேறி விடுமோ என்ற அச்சத்தில் அமெரிக்கா ரத்து அதிகாரத்தை பயன்படுத்தி தீர்மானத்தை தோற்கடித்தது. 1948 ஆம் ஆண்டு முதல் இஸ்ரேல் - பாலஸ்தீனம் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் 36 தீர்மானங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டே இரண்டு தீர்மானங்கள் மீது மட்டும்தான் ரஷ்யாவும், சீனாவும் ரத்து அதிகாரத்தை பயன்படுத்தி உள்ளன. மீதமுள்ள 34 தீர்மானங்களும் அமெரிக்காவின் ரத்து அதிகாரத்தை பயன்படுத்தி தடுக்கப்பட்டமையாகும். அமெரிக்காவின் இந்த செயல்கள் அனைத்தும் இஸ்ரேலுக்கு ஆதரவான செயல்களாகும்

நிரந்தர போர் நிறுத்தத்திற்காக உலகமே ஒன்று திரண்டு நிற்கிற பொழுது இந்தியா மேற்கண்ட தீர்மானம் குறித்து கூட எந்த ஒரு வார்த்தையும் பேசவில்லை. நிரந்தரமான போர் நிறுத்தம் தேவை என்று இதுவரை அறிவிக்கவில்லை.

பல்வேறு நாடுகள் இஸ்ரேலின் இந்தத் தாக்குதலுக்கு எதிராகக் கண்டனத்தைத் தெரிவிப்பதுடன் பல அமைப்புகள் போர் நிறுத்தத்திற்கான முயற்சிகளையும் மேற்கொள்கின்றன. குறிப்பாக இந்தியா முக்கியமான பங்குசெலுத்தக்கூடிய பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பு போர் நிறுத்தத்திற்காக மெய்நிகர் கூட்டத்தை நடத்தியது. சீனா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா உட்பட 11 நாடுகளுக்கு மேற்பட்ட ஜனாதிபதிகள் கலந்து கொண்டார்கள். இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி இந்தக் கூட்டத்தை தவிர்த்தார். வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை கலந்து கொள்ள வைத்தார். அவரும் போர் நிறுத்தம் பற்றி பேசவில்லை , நிவாரண உதவிகளைப் பற்றி பேசி முடித்தார். பிரிக்ஸ் நாடுகள் போர் நிறுத்தத்திற்கான உடனடி தீர்மானத்தை நிறைவேற்றின. தென்னாப்பிரிக்கா நாடு இஸ்ரேலின் போர்க்குற்றங்களை சர்வதேச நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என்று கடுமையான நிலை எடுத்தது.

பயங்கரவாதம் தொடர்பான விஷயத்தில் பூஜ்ஜியம் சகிப்புத்தன்மையுடன் தான் இருப்பதாக இந்திய பிரதமர் அடிக்கடி பேசினாலும், ஹமாஸ் அமைப்பின் தாக்குதலை பயங்கரவாத தாக்குதலாக அறிவித்த இந்தியா, இஸ்ரேல் ராணுவம் பாலஸ்தீன குழந்தைகள் உட்பட பொதுமக்களை கூட்டம் கூட்டமாக கொன்று குவிப்பதை பயங்கரவாதம் என்று கண்டிக்கத் தயாராக இல்லை. இந்தியாவில் இருந்து 18,000 தொழிலாளர்கள் இஸ்ரேலின் பணி புரிவதும், இந்திய வம்சாவளியினர் 85 ஆயிரம் பேர்கள் (குறிப்பாக மணிப்பூர் பஞ்சாப் மகாராஷ்டிரா) அங்கு இருப்பதும் இதற்கு காரணமாக கூறமுடியாது. அங்கு பணிக்கு சென்றுள்ள தொழிலாளர்களை பாதுகாப்பாக அழைத்து வரும் ஏற்பாடு நடந்து விட்டது.

ஹமாஸ் அமைப்பு ஒரு பயங்கரவாத அமைப்பு என்று இந்தியா இதுவரை சட்டரீதியாக எந்த முடிவும் செய்யவில்லை. அந்த அமைப்பை இந்தியா தடை செய்யவும் இல்லை. அமெரிக்கா, ஜெர்மனி, பிரிட்டன் உட்பட பல நாடுகள் அந்த அமைப்பை தடை செய்யவில்லை. அவ்வாறு இருக்கிற பொழுது ஒரு பயங்கரவாத அமைப்பு என்ற முத்திரை குத்துவது ஏன்? இந்தியா அதற்கு தடை விதிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இஸ்ரேல் முயற்சி செய்கிறது. அதன் ஒரு காரணியாக மும்பையில் 26/11 நடைபெற்ற தாக்குதலில் தொடர்புடைய லஸ்கர்-இ-தொய்பா அமைப்பை பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இந்தமாதம் இஸ்ரேல் தடை செய்துள்ளது. இந்தியாவின் நரேந்திர மோடியும் ஜி-20 நாடுகளின் நிறைவு அமர்வு, உலகளாவிய தெற்கு நாடுகளின் உச்சி மாநாடு என்ற இரண்டு மெய்நிகர் நிகழ்ச்சியில் இஸ்ரேல் ஹமாஸ் மோதல் பற்றி பேசினார். இந்த உரையும், அதன் பிறகு வெளியுறவுத்துறை அமைச்சரும், பாதுகாப்பு அமைச்சரும் கொடுத்த கூட்டு அறிக்கையின் சாராம்சங்கள் மேற்கத்திய நாடுகளின் நிலைப்பாட்டை பிரதிபலிப்பனவாக இருந்தன.

இந்தியா தெற்கு உலகில் உள்ள முக்கியமான நாடு என்ற முறையில் இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதில் முக்கியமான பங்காற்றி இருக்க முடியும். காரணம் ஏற்கனவே அணிசேரா நாடு என்ற முறையில் பல முயற்சிகளை எடுத்த ஒரு நாடு இந்தியா. ஆனால் இஸ்ரேலின் கொடூரத் தாக்குதலை தொடர்ந்து ஆதரிப்பதன் மூலம் அதற்கான வாய்ப்பை இழந்தது. அது மட்டும் அல்ல ரஷ்ய -உக்ரைன் போரில் யுத்தத்திற்கு எதிராக இருக்கிறோம் என்ற முறையில் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் இஸ்ரேலின் யுத்தத்தை ஆதரிப்பதன் மூலம் பின்னடைவு ஏற்பட்டு உள்ளது. இந்தியாவின் நிலைப்பாடு தெற்கு உலகத்திலிருந்து இந்தியாவை தனிமைப்படுத்தி உள்ளது. சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட் ஆகிய நாடுகள் இந்தியாவுடன் உருவாக்கி இருந்த சிறப்பு உறவுகள் சீர்குலைந்துள்ளன. இந்தியா -மத்திய கிழக்கு- ஐரோப்பா ஆகியவற்றை இணைக்க கூடிய முறையில் உருவாக்கப்பட்ட பொருளாதாரத் தாழ்வாரம் கேள்விக்குறியாக மாறி உள்ளது.

மகாத்மா காந்தியின் காலத்தில் இருந்து அடுத்தடுத்து வந்த இந்திய நாட்டின் தலைவர்கள், அரசு தலைவர்கள் பாலஸ்தீன மக்களின் நியாயமான போராட்டத்திற்கு ஆதரவாக இருந்தனர். 1974 ஆம் ஆண்டு பி. எல்.ஓ. அமைப்பை ஐ.நா. சபையின் பார்வையாளராக அங்கீகரித்ததில் இந்தியா முக்கியமான பங்காற்றியது.1988 ஆம் ஆண்டு பாலஸ்தீனத்தில் காசா பகுதியில் தூதரகத்தைத் திறந்த முதல் நாடு இந்தியா.

இந்தியாவில் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தவுடன் இஸ்லாமியர் மீதான வெறுப்பு அரசியலின் தொடர்ச்சியாக இஸ்ரேல் ஆதரவு நிலையை எடுத்தது. எனவேதான் ஆயுதம் வாங்குவதிலிருந்து அனைத்து விதமான ஒப்பந்தத்திலும் இஸ்ரேலுடன் உறவுகளை உருவாக்கியது. இந்திய வரலாற்றில் முதல் முறையாக இஸ்ரேலின் யுத்தத்திற்கு ஆதரவாக சங்கிகள் இந்தியாவில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்க விசுவாசத்தை நிரூபிப்பதற்காக சீன எதிர்ப்பு நிலை எடுக்கிறார். அதன் தொடர்ச்சியாக தெற்கு உலகின் தலைவன் தான்தான் என்று ஒரு பிம்பத்தை கட்டமைக்க முயற்சி செய்வதன் மூலமாக பாலஸ்தீன மக்களுக்கு மட்டும் அல்ல இந்திய மக்களுக்கும் துன்பத்தை வரவழைத்துக் கொண்டிருக்கிறார். உலக மக்கள் பாலஸ்தீனம் பக்கம் இருக்கிறார்கள். அமெரிக்காவும் இஸ்ரேலும் இது வரை இல்லாத வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தியா தனிமைப்படாமல் இந்திய மக்களை பாதுகாப்பதற்காக உலக மக்களோடு இணைந்து இருக்க வேண்டும். வெறுப்பு அரசியலுக்கு இறுதி முடிவு கட்டுவதன் மூலமாகத்தான் இது சாத்தியமாகும்.


# கொலைப்பசியுடன் செவிக்குணவு

## துயரங்களின் மொழிகளின் அலைவரிசையில் இயங்கும் ஒலிவாங்கி நான்

**எழுத்தாளர், சமூக ஆர்வலர், சூழலியல் ஆர்வலர், களப்போராளி, போராளி என்று பன்முக ஆளுமைகளை தன்னகத்தே கொண்டுள்ள மதுரை மாநகரை சுவாசக்காற்றாய் சுவாசிக்கும் அ.முத்துக்கிருஷ்ணன் இது காறும் நமது அறிவுப் பசியை தீர்த்துவிட்டு தனது அடுத்த நடவடிக்கையாக தமிழகத்தின் கொலைப்பசியை தீர்க்கும் தனது நூலை ஆஸ்திரேலியாவில் அறிமுகப்படுத்த வருகை புரிந்துள்ளார். அவரோடு எதிரொலி சார்பாக உரையாடினோம்.**



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி



**எதிரொலி : முத்துகிருஷ்ணனுக்கு எழுத்தாளர், சமூக ஆர்வலர், போராளி என்று பல முகங்கள், பல ஆளுமைகள் உங்களுக்கு உண்டு இல்லையா. நீங்கள் முத்துகிருஷ்ணனாக உணரும் ஆளுமை என்னவாக இருக்கும் ?**

**முத்துக்கிருஷ்ணன் :** நான் குழந்தைப்பருவம் முதலே சமூகம் சார்ந்து வளர்க்கப்பட்டவன். மும்பையில் வளர்ந்ததால் தமிழ்ச்சமூகம் மட்டுமின்றி இந்தியாவிலிருந்து பல மாநில மக்களுடன் பழகக்கூடிய, வாழக்கூடிய அனுபவம் எனக்கு இளமையிலேயே கிடைத்தது. சாதி, இன,மொழி பேதமற்ற ஒருவருக்கொருவர் உதவி செய்யும் சூழ்நிலையில் வளர்க்கப்பட்டேன் .இதன் காரணமாக என் கண் முன்னில் ஒரு அநியாயம் நடக்கிறதென்றால் அதைப் பற்றி கேட்கலாம், இயன்றதைச் செய்யலாம் என்ற மனநிலை இந்த வளர்ப்பினால் கிடைத்தது. நான் இன்றுவரை செய்கின்ற எல்லாக் காரியங்களும், நீங்கள் சொல்கின்ற சொற்களுக்குள் அடங்கலாம் , அடங்காமல் போகலாம். ஆனால் நான் அதற்காக எதுவும் செய்வதில்லை. மற்றபடி நான் எழுதுவதால் எழுத்தாளர் என்று நீங்கள் அழைக்கிறீர்கள். தன்னுணர்வின் அடிப்படையில் இயல்பாக எழுத பேச முடிகிறது . சமூகம் சார்ந்து இயங்குதல் என்பது என் உயிரணுக்களிலேயே பிணைந்திருக்கிறது.

**எதிரொலி : உங்களைத் தொடர்ந்து கவனித்து வருபவர்களுக்கு நன்கு தெரியும், உங்களின் ஒவ்வொரு நகர்வும் தன்னுணர்வின் அடிப்படையில் அமைந்தது என்று. இதற்கான தாக்கம் உங்கள் குடும்ப சூழ்நிலையாக இருக்கலாம் இல்லையா ?**

**முத்துக்கிருஷ்ணன் :** நிச்சயமாக. என் குடும்பத்தில் அதற்கான வேர்களைத் தேடிப்பார்க்கும்போது எனது அம்மாவழி தாத்தா நேதாஜியின் இந்திய ராணுவத்தில் தேசிய விடுதலைக்காக போராடியவர். அது மட்டுமன்று எங்கள் குடும்பத்தில் 1948ஆம் ஆண்டிலேயே முதல் ஜாதிமறுப்பு திருமணம் செய்தவர் . நான் பேசுவதற்கும் ,இயங்குவதற்கும் ,எங்கள் குடும்பத்திற்கும் ,என் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் எந்த வித்தியாசமும் கிடையாது. எனது தோள்களில் எந்தவிதமான கலாசாரச் சுமைகளும் இல்லை, அதனாலேயே என்னால் தொடர்ந்து மக்களிடம் இயல்பாக நெருங்க முடிகிறது. இதனால்தான் அரசாங்கங்கள் அத்துமீறும்போது உரிமை மறுக்கப்பட்ட மக்களின் சார்பாக தன்னெழுச்சியாக இயங்க முடிகிறது .


**எதிரொலி : உங்களின் பாலஸ்தீனம் பயணம் தொடர்பான கட்டுரையில் உலகத்திலுள்ள துயரத்தின் மொழிகள் யாவும் ஒரே அலைவரிசையில் இருக்கிறது என்று சொல்லியிருந்தீர்கள். ஒருவேளை அந்த துயரத்தின் மொழியை வாங்கும் ஒலிவாங்கி உங்கள் உள்ளத்தில் எப்போதும் இடைவிடாமல் இயங்குகிறது என்று கூறலாம் இல்லையா ?**

**முத்துக்கிருஷ்ணன்:** நிச்சயமாக. நான் எப்பொழுதும் யார் பேசினாலும் நன்கு கேட்பவன். இரண்டு காதுகளும் அதற்குத்தானே .எந்த இடத்திலும் விசும்பலோ , கண்ணீரோ, கூக்குரலோ என் காதுகளை தொடாமல் போகவிட்டதில்லை. எல்லாவற்றையும் உற்று கவனிக்கும் பழக்கம் எனக்கு சிறுவயதிலிருந்தே இருந்தது. அதன் வழியாக சமூகத்தை அறிந்து கொள்ள முடிந்தது. இதன் தாக்கங்களே என்னை எழுத்து நோக்கி தள்ளியது என்று சொல்லலாம் .

**எதிரொலி: 'தூங்கா நகர நினைவுகள் 'மதுரையைப் பற்றிய சிறந்த ஆவணம். ஆனால் அதில் மதுரையில் வாழ்ந்த பல்வேறு வகையான மனிதர்கள் குறிப்பாக வித்தை காட்டுபவர்கள் , கலைக் கூத்தாடிகள் மற்றும் பல்வேறு குறுங்குழு சமூகத்தைப் பற்றிய தகவல்கள் இல்லையே?**

**முத்துக்கிருஷ்ணன்:** அது தவறான புரிதல். இரண்டு புத்தகங்களாக வரவிருக்கிறது. நீங்கள் எல்லோரும் படித்த முதல் புத்தகம் 1948 ஆம் ஆண்டோடு முடிகிறது. இதற்கு பின்னான மதுரை இருக்கிறதல்லவா?. அதாவது நான் பார்த்த, வாழ்ந்த என் மதுரையைப் பற்றி இன்னும் எழுதவில்லை, அவை எல்லாம் இரண்டாம் பாகத்தில் வரும், அது சில ஆண்டுகளில் வெளிவரும். அதில் நீங்கள் கூறிய எல்லாம் இருக்கும் ( நீங்களும், நானும் பார்த்து வளர்ந்த மதுரை). அதற்கான ஆயத்த வேலைகளில் இருக்கிறேன்.

**எதிரொலி : அந்த புத்தகத்தில் நீங்கள் சங்கரய்யா, மாயாண்டி பாரதி எல்லாம் பற்றி குறிப்பிட்டு இருந்தீர்கள்.**




**இவர்களைப் போன்ற பல புறக்கணிக்கப்பட்ட தியாகிகளின் பற்றிய குறிப்புகள் நமது பாட புத்தகங்களில் எதுவுமில்லை. இவர்களை எல்லாம் பற்றி எழுதும் திட்டம் இருக்கிறதா ?**

**முத்துக்கிருஷ்ணன் :** நான் மதுரையில் குறுக்கும் நெடுக்குமாக அலைந்தவன். எனக்கு ஓய்வு கிடைக்கும்போது நான் இளைப்பாறும் இடம் மாயாண்டி பாரதி, வைத்தியநாதர் ஐயர் மகன் வை.சங்கரன், சொர்ணத்தம்மாள் போன்ற தியாகிகளின் வீடுகள் தான். நான் இந்தப் பெரியவர்களால் வளர்க்கப்பட்டேன். என் பயணமெல்லாம் இந்தப் பெரியவர்களை நோக்கித்தான் இருக்கும்.இவர்களிடம் சுதந்திரப் போராட்டகால நிகழ்வுகளை கேட்டு வளர்ந்தேன். இப்படிப்பட்ட மாபெரும் தியாகிகள் மதுரையில் கேட்க நாதியில்லாமல் கைவிடப்பட்டு மறைந்து போய்விட்டனர். அவர்களின் வாழ்க்கையை நம்மால் என்றும் வாழமுடியாது. மாபெரும் காவிய வாழ்க்கை வாழ்ந்திருக்கின்றனர். இந்த மாபெரும் தியாக ஆளுமைகளின் கதைகளை கேட்டு நம் குழந்தைகள் வளராமல் திரைப்பட நாயகர்களின் பின்னால், கிரிக்கெட் வீரர்களின் பின்னால் அலைவது நமது தலைமுறையின் சாபக்கேடு. நாம் யாரைக் கொண்டாடவேண்டும் என்பதில் எனக்கு தெளிவு உண்டு, அதனால் என் நாயகர்கள் பற்றி நான் தொடர்ந்து எழுதுவேன்.

**எதிரொலி : அறியப்படாத பல ஆளுமைகளைப் பற்றி தொடர்ந்து எழுதுகிறீர்கள். சமீபத்தில் நீங்கள் எழுதிய ஆய்வு மாணவர்களுக்கு புத்தகம் கொடுத்து உதவிய முருகேசன் ஐயா அவர்களைப் பற்றிய கட்டுரை எனக்கு கண்ணீரை வரவழைத்தது. தமிழகம் தவறவிட்ட இந்த மாதிரியான பல்வேறு மகத்தான தன்னலம் கருதாமல் பெருவாழ்வு வாழ்ந்த மனிதர்களைப் பற்றி எழுதும் திட்டம் இருக்கிறதா ?**

**முத்துக்கிருஷ்ணன் :** நிச்சயமாக. ரசனையின் சிறகுகள் என்று கே.என். நடராஜன் என்கிற காந்திய ஆளுமை பற்றி எழுதியிருக்கிறேன் .நான் தொடர்ந்து முகநூலில் இந்த ஆளுமைகளைப் பற்றி எழுதி வருகிறேன். எனக்கு ஒரு வருத்தமுண்டு. அவர்களின் இறப்பின் போதுதான் எழுதியிருக்கிறேன். ஏன் முன்னமே எழுதவில்லையென்று. அடுத்ததாக இன்னொரு தொடர் எழுதும் திட்டம் மனதிலுண்டு. என்னை ஆகர்சித்த உலகம் முழுவதிலுமுள்ள ஆளுமைகளைப் பற்றி எழுதவேண்டுமென்று .

**எதிரொலி :உங்களது தொடர்ந்த நடவடிக்கைகள் எல்லாம் இடதுசாரிப் பார்வையையில் அமைந்ததாக இருந்த போதிலும், நீங்கள் எந்த இடதுசாரி அரசியலமைப்பிலும் இல்லையே. இதற்கான காரணம் என்ன ?**

**முத்துக்கிருஷ்ணன் :**அனைவரும் சமம் என மதிக்கப்படும் சமத்துவ உலகை விரும்புபவன் நான். அதை நோக்கிப் பயணிப்பவன் . நான் எனது தொடக்க காலத்தில் இடதுசாரி இயக்கங்களில் இருந்தேன் . இயக்கங்களின் பெரும் கட்டுமானங்களுக்குள் என்னால் இயங்க முடியவில்லை. நான் சுதந்திர சிந்தனையாளனாக என்னை வடிவமைத்துக்கொண்டேன் . நான் என்ன செய்ய வேண்டும் , எதை எழுத வேண்டுமென்பதில் எனக்கு நன்கு தெளிவுண்டு.

(18ஆம் பக்கம் பார்க்க)

# கொலைப்பசியுடன் செவிக்குணவு

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் நிறுவனங்களுக்கு / அமைப்புகளுக்கு உள்ளே இருந்து இதையெல்லாம் சுதந்திரமாகச் செய்யும் சாத்தியம் இல்லை என்பதை உணரும் தருணத்தில் வெளியேறினேன். கட்சியின் தலைமை முடிவெடுக்கும்வரை நான் காத்திருக்க முடியாது . கருத்து வேறுபாடுகள் ஆரோக்கியமான மன நிலையுடன் அனுகப்படாமல் விரோதத்தின் நிழல்களை உருவாக்குவதை உணர்ந்தேன். இது போன்ற காரணங்களால் அமைப்புகளிலிருந்து நான் வெளியேறிவிட்டேன். நான் என் அரசியல் சமூக கருத்துக்களை சுதந்திரமாக இடித்துரைப் பவனாக,,தொடர்ந்து முந்திச் செல்பவனாக இருக்கவே விரும்புகிறேன்.

**எதிரொலி : கடந்த 30 ஆண்டுகளாக தொடர்ந்து சமூகப் பிரச்சினைகளுக்காக குரல் கொடுத்து வருகிறீர்கள். உங்கள் பார்வையில் இளைய சமுதாயத்தினரிடையே சமூக விழிப்புணர்வு வளர்ந்திருக்கிறதா?**

**முத்துக்கிருஷ்ணன் :** மிகப்பெரிய அளவில் விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது என்று தான் நான் சொல்வேன். குறிப்பாக தமிழர்கள் சமூக ஊடகங்களை செவ்வனே பயன்படுத்துகின்றனர். வலதுசாரி அமைப்பினர் கோடிக்கணக்கில் செலவழித்து பொய்த்தகவல்கள் பரப்பும் ‘ட்ரோல் ஆர்மிக்கு’ எதிராக நமது தமிழ் இளைஞர்கள் பாதுகாப்பு கவசம் போல் செயல்பட்டு வருவது எனக்கு மிகவும் மகிழ்ச்சி தரக்கூடியது. மின்னணு யுத்தம் தினமும் நடக்கிறது . நமது இளைய சமுதாயம் தொடர்ந்து இயங்குவது மிக ஆரோக்கியமான விஷயமாகவே நான் பார்க்கிறேன் .

**எதிரொலி :நீங்கள் கூறிய மின்னணு யுத்தம் தொடர்பான கேள்வி.உங்கள் அளவிற்கு தமிழ்நாடு பற்றிய பரிச்சயம் எனக்கு கிடையாது . வலது சாரிகளின் வளர்ச்சி குறிப்பாக பா.ஜ .க-வின் வளர்ச்சி கடந்த ஐந்து ஆண்டுகளில் அபரிமிதமாகியுள்ளது . நீங்கள் கூறியபடி இளைய சமுதாயத்தின் விழிப்புணர்ச்சி வளர்ந்திருக்கிறதென்றால், இந்த வலதுசாரிகளின் அபரிமித வளர்ச்சி எதனால் சாத்தியம் என்று நினைக்கிறீர்கள்?**

**முத்துக்கிருஷ்ணன் :**அண்ணல் அம்பேத்கார் கூறியபடி இரண்டு வரலாறுகள் இருக்கிறதல்லவா ? . அரசியல் வரலாறு மற்றும் சமூக வரலாறு. நாம் நமது சமுதாயத்திற்கு சமூக வரலாறு பற்றி தெளிவாக எடுத்துச் செல்லாததே வலது சாரிகளின் வளர்ச்சிக்கு காரணம். நாம் இன்று அனுபவிக்கும் பல சௌகரியங்கள் வானத்திலிருந்து கிடைத்தது என்று நினைக்கிறார்கள். அதன் பின்னே உள்ள மாபெரும் போராட்ட ,தியாக வரலாறு பலபேருக்கு தெரியவில்லை . நாம் பட்ட துயரங்களை எவ்வாறு நம் குழந்தைகளுக்கு சொல்லி வளர்க்க வேண்டுமோ அதைப் போன்று இந்த சமூக வரலாற்றையும் சொல்லி வளர்க்க வேண்டும் . அப்படிச் செய்யாததன் விளைவைத் தான் நாம் இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்.

**எதிரொலி :வீரசவர்க்கர் மாபெரும் தியாகி ஆவதும், மகாத்மா காந்தி ஒதுக்கப்படுவதும் நடைபெறுகிறது தானே. எங்கு சென்றாலும் இந்த வலதுசாரி கும்பல் மாபெரும் பலத்துடன் நம்மிடம் சண்டையிடுகின்றனர். ஒரு கட்டத்திற்கு மேல் தொடர்ந்து வாதம் செய்ய முடியா மல் அயர்ச்சியடைந்து நானே விலகிவந்திருக்கிறேன். அவர்களை எப்படி எதிர்கொள்வதென்று தெரியவில்லை ?**

**முத்துக்கிருஷ்ணன் :**ஆமாம். அவர்களை விட மிகப்பலமாக இயங்க வேண்டிய காலகட்டமிது . இந்த வலதுசாரி ’ட்ரோல் ஆர்மி’ அனைவரும் பணத்திற்காக வேலை செய்பவர்கள். இது அவர்களின் பிழைப்பு. நாம் அப்படி அல்ல. இந்த சமூக நலனிற்காக தொடர்ந்து சளைக்காமல் பணியாற்ற வேண்டு மென்பது மட்டுமே நமக்கான உந்துசக்தியாக இருக்கவேண்டும். அவர்களுக்கு மதமும், சாதியும் உதவி செய்கிறது. பலப்படுத்தப் பட்ட சாதிய அமைப்புடன் இந்த வலதுசாரி அமைப்புகள் தங்கள் அரசியல் லாபத்திற்கு பயன்படுத்துகின்றனர் .நாம் சமூக விடுதலைக்காக சோம்பல் அடையாமல் அவர்களை விட ஆற்றலுடன், வீரியத்துடன் இன்னும் தீவிரமாக நமது செய்திகளை மக்களிடையே கொண்டு செல்லவேண்டிய தேவை இருக்கிறது.

**எதிரொலி: தீண்டாமைக்கொடுமைகள் இன்னும் குறையவில்லையே . சமீபத்தில் திருநெல்வேலியில் நடந்த கொடூரம் ,தண்ணீரில் மலம் கலக்கியது போன்று பல. நாம் படித்த,வளர்ந்த சமூகமாக இருந்தபோதிலும் இதற்கான காரணங்கள் என்னவென்று நினைக்கிறீர்கள் ?**

**முத்துக்கிருஷ்ணன்:** நீங்கள் சாதியையும், சாதியக் கட்டு மானங்களையும் சரியென்று நினைப்பது, போலிப் பெருமிதங் களை உயர்வாக கருதுவது, உயர்ந்தவர் - தாழ்ந்தவர் என்ற பாகு பாடு இருப்பது சரியென்று நினைக்கும்வரை இது தொடரும். நமது பள்ளிகள் சாதியக் கொடுமைகளை குழந்தைகளுக்கு சொல்லிகொடுக்கத் தவறிவிட்டன என்று தான் சொல்லமுடியும். அப்படியே காலச்சக்கரத்தை பின்னோக்கி தள்ளிவிட்டனர். நமது தேசிய கல்விக்கொள்கை அதிர்ச்சியளிக்கிறது. ராமாயணமும், மகாபாரதமும் கல்வித்திட்டத்தில் சேர்க்கப்படவேண்டும் என்கின்றனர். நாம் நம்முடைய குழந்தைகளை பாதுகாக்க வேண்டுமென்றால் , சமூக வரலாறு குறித்து பேசவேண்டும். அதன் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும். அனைத்து சமூக ஊடகங்களையும் பயன்படுத்தி தீவிரமாக விழிப்புணர்வை






ஏற்படுத்தவேண்டும் .

**எதிரொலி :இதன் தொடர்ச்சியான கேள்வி. சமீபத்தில் இங்கே நடந்த பூர்வகுடிகளின் குரல் வாக்கெடுப்பு தோல்வியடைந்திருக்கிறதே . ஒரு சமூக ஆர்வலராக இதை எப்படி பார்க்கிறீர்கள் ? இந்த முடிவு உங்களுக்கு அதிர்ச்சி அளித்ததா ?**

**முத்துக்கிருஷ்ணன் :** இது நாம் தீவிரமாக விவாதிக்க வேண்டிய விஷயம். பேசினால் இன்று முடிக்க முடியாது. நான் தொடர்ந்து கடந்த எட்டு ஆண்டுகளாக ஆஸ்திரேலியப் பயணத்தில் பூர்வகுடி மக்களுடனும், அவர்கள் போராட்டங்களிலும் கலந்துகொண்டிருக்கிறேன் . பல்வேறு ஆய்வுகளிலும் ஈடுபட்டு வந்திருக்கிறேன் .எல்லா இடங்களிலும் இது அவர்களது பூர்விகம் என்று பெயருக்கு ஒப்புக்கு ஒரு அடையாளம் மட்டுமே இருக்கிறது . அரசியல் ரீதியாக எந்த அங்கீகாரமும் இல்லை. இந்த முறை இந்த வாக்கெடுப்பு வெற்றி பெருமென்றே நினைத்தேன். உங்களுக்கு முழுமையான புரிதல் இல்லையென்றால் ,இல்லை என்று வாக்களிக்கவும் என்ற எதிர்க்கட்சிகளின் பிரசாரத்தின் காரணமாகவே இந்த வாக்கெடுப்பு தோல்விடையைந்து விட்டதென்று நினைக்கிறேன். இது நீண்ட போராட்டம். நாம் அவர்களோடு இணைந்து அவர்களது உரிமைக்காக போராடவேண்டும்.

**எதிரொலி :உங்களது உலகம் நமக்காக நூலிலுள்ள ஒரு கட்டுரையில் “நம் சொகுசுகளைத் தாண்டி நமக்கு எந்தக் கவலையுமில்லை.நமது சொகுசுகளுக்காக உல கில் எங்கோ ஒரு மூலையில் ஒரு சமூகம் பெரும்விலை கொடுக்கிறது. இதை உணரும் காலம் விரைவில் வரும்”. எழுதியிருக்கிறீர்கள்.இதை உணரும் காலம் வந்துவிட்டதா? அல்லது இனி வருமா ?**

**முத்துக்கிருஷ்ணன்:** வரும். கண்டிப்பாக வரும். நான் ஒரு நேர்மறைச் சிந்தனையாளன் .மாற்றம் என்பதே மாறாத ஒன்று. மாற்றம் நிகழ்ந்தே தீரும் . உலகமெங்கிலும் எவ்வாறு வலது சாரிகள் வளர்ந்துவருகிறார்களோ ,அதே அளவிற்கு மக்களுடன் இணைந்து மக்களுக்காக பணியாற்றும் ஆர்வலர்கள் கூட்டமும் அதிகரித்துவருகிறது . “we are 99%” மற்றும் பல நாடுக-ளில் நடக்கும் மக்கள் இயக்கங்களின் எழுச்சியை காண முடிகி றது .இந்தியாவில் ஒரு வருடம் காலம் நடந்த விவசாயிகளின் எழுச்சி பிரமிக்க வைக்கிறது. மக்கள் போராட தயாராகவே இருக்கிறார்கள். அவர்களை ஒருங்கிணைக்கும் பொறுப்பு நமக்கு இருக்கிறது.

**எதிரொலி : ‘கொலப்பசி ’நூலின் சாதனை என்பது உணவளிப்பது அறம் என்பதை மிகவும் தன்னியல்புடன் செயல்படுத்தும் அபாரமான மனிதர்களை அறிமுகப் படுத்தியது. ஜெயமோகனின் சோற்றுக்கணக்கு நூலிலும் ,உஸ்தாத் ஹோட்டல் படத்திலும் வருவது போல. இன்னும் நாங்கள் கேட்டிராத பல உணவை அளிக்கும் மனிதர்கள் இருக்கிறார்கள் தானே?**

**முத்துக்கிருஷ்ணன் :**ஆம் , சிறிய ஊர்களில் மிக அற்புதமான மனிதர்கள் இருக்கிறார்கள். திருவாரூர் மனோன்மணி மிலிட்டரி ஹோட்டல், சுற்றுவட்டார ஊர்களிலிருந்துவரும் மாணவர்களுக்கு தங்குமிடமும் உணவும் தந்துதவும் புதுக் கோட்டை பழனியப்பா மெஸ் என்று சொல்லிக்கொண்டே போகலாம். நான் முன்பே கூறியபடி ’கொலப்பசி’ மொத்தம் ஐந்து தொகுதிகளாக வரும். மீதமுள்ள தொகுதிகளில் இன்னும் நிறைய அற்புதமான அறமாடும் மனிதர்களை அறிமுகப்படுத்துவேன்.

**எதிரொலி :உலகம் நமக்காக நூலில் நிறைய கட்டுரைகள் புதுப்பிக்கவேண்டியுள்ளதே ?. குறிப்பாக கடலும் கண்ணீ ரும் (கேரளா மீனவர்கள் சுட்டுக்கொலை) மற்றும் கிளெ மென்ஷியே ஆஸ்பெஸ்டாஸ் பிரச்சினை இன்னும் பிற .**

**முத்துக்கிருஷ்ணன் :**ஆம். நான் முன்பே கூறியபடி எந்த போராட்ட மும் நீண்ட காத்திருப்பு . தொடர்ந்து களத்தில் நீதி கிடைக்கும்வரை போராடவேண்டும். அந்தக் கட்டுரைக ளெல்லாம் அந்தப் பிரச்சினைகளின் பின்புறமுள்ள சர்வதேச அரசியல் சிக்கல்களையும் ,ஏகாதிபத்திய மனநிலையையும் மக்களுக்கு கொண்டு செல்லவேண்டுமென்பதே. அதன் பிறகு மக்கள் அதனை பார்த்துக்கொள்வார்கள். அடுத்த பதிப்பு வரும் பொழுது அவற்றையெல்லாம் புதுப்பிக்கும் திட்டம் இருக்கிறது.

**எதிரொலி : இஸ்ரேல் - பாலஸ்தீன பிரச்சினைகள் பற்றி தொடர்ந்து பேசியும், எழுதியும் வருபவர் நீங்கள். தற்பொழுது நடக்கும் யுத்தம் கூட ஹமாஸ் பிணைக்கைதிகளை விடுவித்திருந்தால் தவிர்த்திருந்திருக்கலாம் என்று கூறப்படுகிறதே. அதைப் பற்றிய உங்களின் கருத்து ?**

**முத்துக்கிருஷ்ணன் :**அது தவறான புரிதல். இந்தப் பிரச் சினையைப் பற்றி பேசவேண்டுமானால் ஒரு நாள் போதாது. அதன் பின்னாலுள்ள சர்வதேச சதிகளையெல்லாம் மேலோட்ட மாக பார்ப்பவர்களுக்கு தெரியாது. நான் காசாவிற்கு சென்றி ருக்கிறேன். அங்குள்ள மக்களிடமெல்லாம் பழகி, அவர்களின் சிக்கல்களையெல்லாம் நேரடியான களத்தில் இறங்கி அறிந்து வந்ததனால் சொல்கிறேன். நீங்களே இப்போது பார்க்கலாம். ஒவ்வொரு இஸ்ரேல் பிணைக்கைதிகளின் விடுவிப்பிற்கு பதிலாக எத்தனை பாலஸ்தீன அப்பாவிகளை விடுதலை செய்கிறது? இதற்கு முன்னமே நான் முகநூலில் எழுதியிருக்கிறேன். முன்பொரு முறை பிணைக்கைதியான இஸ்ரேல் ராணுவ அதிகாரியை விடுவிப்பதற்கு ஒரு ஆயிரம் பாலஸ்தீன கைதி களை விடுதலை செய்தது. அங்கே நடப்பது இன அழிவு. எங்கெல்லாம் சிறுபான்மையினர் ஒடுக்கப்படுகிறார்களோ அங்கெல்லாம் அந்த மக்களுக்காக குரல் கொடுப்பது நமது கடமை.

**எதிரொலி : உங்கள் உரையாடல்களை அருகிலிருந்து நான் கவனித்த வரைக்கும் ஒரு அபாரமான நகைச்சுவைத் திறன் உங்களிடமிருக்கிறது. ஆனால் உங்கள் எழுத்தில் இன்னும் வெளிப்படவேயில்லை. உங்களின் மறுபக்கமான மிக இலகுவான , நகைச்சுவையான ,இயல்பான முத்துகிருஷ்ணன் எப்போது வெளிப்படுவார் ?**

**முத்துக்கிருஷ்ணன் :** ஆம். இன்னும் வெளிப்படவில்லை. உரையாடலில் நான் இலகுவான ஆள். ஆனால் எழுதவரும்போது ஒரு மிகப்பெரும் பொறுப்பை தலையில் ஏற்றிக்கொள்வதால் மிகத்தீவிரமான ஆளாகிவிடுகின்றேன். இப்பொழுதான் என் அனுபவங்களை எழுத தொடங்கியிருக்கிறேன் . கொலப்பசி நூலில் கூட ஒரு சில இடங்களில் நீங்கள் பார்க்க முடியும். இதுவரையில் எப்பொழுதும் தயார் நிலையிலிருக்கும் ராணுவ வீரரைப்போல் தான் இருந்திருக்கிறேன். இனிமேல் இயல்பான முத்துக்கிருஷ்ணன் வெளிப்படுவார்.


Tarra Bulga National Park
Gippsland
Cape Woolamai
Phillip Island
அருகில் இருங்கள்,
அருகே செல்லுங்கள்.
விக்டோரியாவைப் பார்வையிடவும்
நீங்கள் ஒரு உலகமளவு தொலைவில் இருப்பதைப் போல உணர நீங்கள் இப்போது வெகுதூரம் செல்ல வேண்டியதில்லை. கூட்டத்தை விட்டு வெளியேறி உங்கள் இடத்தைக் கண்டுபிடித்தாலே போதுமானது. நீங்கள் இயற்கையுடன் மீண்டும் கலந்து, இயற்கைக்காட்சிகளில் திளைத்து மன நிம்மதியையும் அமைதியையும் பெற்றுக்கொள்வதற்கு சரியான இடம் இதுவேயாகும். நீங்கள் இங்கே ஒரு சிறந்த மதுவை அனுபவித்து மன மகிழ்வுடன் இருக்கலாம். அதற்காக மேலும் மேலும் விக்டோரியாவிற்கு அருகில் செல்லுங்கள்.
VISIT VICTORIA
visitvictoria.com

# வெளிநாட்டிலிருந்து கல்விகற்க ஆஸ்திரேலிய வரும் மாணவர்களுக்கான குடிவரவுச் சட்ட ஆலோசனைகள்

**சட்டத்தரணி - த.நா.ஜெயராசசிங்கம்.**

இவர் முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட உதவி விரிவுரையாளர். பின்னர் பிரிட்டனில் சட்டம் பயின்று சட்டத்தரணியாகத் தேர்ச்சி பெற்றவர். பின் ஆஸ்திரேலியா மொனாஷ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். அதன் பின்னர் ஆஸ்திரேலியா விக்ரோறியா மாநிலத்தில் வழக்கறிஞராகத் தகுதிபெற்றவர். தற்போது சட்டம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்

1) முக்கியமானதும் முதலாவதுமான ஆலோசனை விரைவாக ஆங்கில மொழியை கற்றுக்கொள்ளுங்கள்

2) ஆஸ்திரேலியா வருகை தந்ததும் இந் நாட்டின் முறைமைகளை அறிந்து கொள்ளுங்கள்

3) நீங்கள் உங்கள் வாழ்வில் அடைய வேண்டிய குறிக்கோள்கள் பற்றிய முற்றுமுழுதான திட்டத்தை வகுத்துக்கொள்ளுங்கள்

4) நீங்கள் அடைய வேண்டிய குறிக்கோள்களை நீண்ட கால குறிக்கோள்கள், மத்திய கால குறிக்கோள்கள் ,குறுகிய கால குறிக்கோள்கள் எனத் திட்டமிடல் வேண்டும்

5) கல்வியை முடித்த பின்னர் நிரந்தர வதிவிடம் பெறவேண்டுமெனில் பொருத்தமான கல்வியல் படிப்பு முறையை தேர்ந்தெடுக்க வேண்டும்

6) நீங்கள் கல்வி முடிந்ததும் நிரந்தர வதிவுடைமை பெற வேண்டுமெனில் குடிவரவு சட்டத்தரணி அல்லது முகவர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் விண்ணப்பத்தை பூர்த்தி செய்யுங்கள்

7) ஆஸ்திரேலியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள சட்டத்தரணிகள் சங்கங்கள் தகுதி வாய்ந்த குடிவரவுச் சட்டத்தரணிகளின் பட்டியல்களை தயாரித்து வைத்துள்ளன.

8) பொதுவாகக் கூறினால் கல்வி கற்கவரும் மாணவர்களின் விசா நிபந்தனைகளில் ஒன்று அவர்கள் குறிப்பிட்ட மணிநேரங்கள் மட்டுமே வேலை செய்ய முடியும். எனவே இந்த நிபந்தனையை மீறினால் குடிவரவுதிணைக்களத்தால் கண்டுபிடிக்கப்பட்டால் உங்கள் விசாவுக்கே இடையூறு ஏற்படும்.

9) கல்வி கற்க வருகை தந்த நீங்கள் வேலை செய்ய விரும்பினால், உங்கள் கல்வியுடன் தொடர்புடைய வேலை ஒன்றைப் பெற முடியுமெனில் முயன்று பெற்றுக்கொள்ளுங்கள். அவ்வாறு கல்வி நெறியுடன் தொடர்புடைய வேலையை சம்பளத்துடன் பெற முடியாவிட்டால் தொண்டராக வேலை செய்ய முடியும் என்றால் அதனை முயன்று பெற்றுக்கொள்ளுங்கள்.

10) நீங்கள் ஆஸ்திரேலியாவின் பெருநகரத்தில் உங்கள் கல்வி சார்ந்த வேலையைப் பெற முடியாது எனில் ஒரு புறநகர்ப் பகுதியில் உள்ள சிறிய நகரத்தில் இடம் பெயர்ந்து கல்வியுடன் சார்ந்த வேலையைப் பெற முயன்று பாருங்கள்.

11) பொதுவாகச் சொல்லப் போனால் ஆஸ்திரேலியக் கல்வி நிறுவனங்கள் வெளிநாட்டு மாணவர்களுக்காக பல திட்டங்களை வைத்துள்ளன. எனவே குறித்த வசதிகளை அறிந்துகொள்ளுங்கள். கல்வி நிறுவனத்தின் நாட்குறிப்பு மூலம் இத்திட்டங்களை அறிய முடியும்.

12) நீங்கள் கல்வியில் மட்டுமின்றி விளையாட்டில் திறமையுள்ளவரெனில் உங்கள் கல்வி நிலையத்தில் உள்ள விளையாட்டு சங்கங்களில் இணைந்து உங்கள் திறமைகளை வெளிப்படுத்துங்கள்.

13) நியாமான காரணங்களின்றி கல்வி கற்க செல்லத்தவறின் உங்கள் விசாவுக்கு இடையூறு ஏற்படும்.

14) உங்கள் கல்வி மற்றும் கல்லூரிகளைத் தேர்ந்தெடுக்கும் போது முகவர்களை மட்டும் நம்பியிராது நீங்கள் முற்றுமுழுதாக ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்

15) நீங்கள் கல்வி கற்கும் போது சக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களோடு ஆரோக்கியமான உறவு நிலையைப் பேணவேண்டும்.




# புயலுக்குப்பின்...

ஊழிக்காலம்-2

51



ஓஎல். பிள்ளைகளுக்கான செமினார் அமர்வுகள் தொடங்க இருந்தன. வவுனியா மகா வித்தியாலயத்துக்கு இங்குள்ள பிள்ளைகள் பேருந்தில் கொண்டு செல்லப்பட்டு, மாலையில்திரும்பக்கொண்டு வருவார்கள். மத்தியான உணவு அனுப்புவது உண்டு. ஓ.எல். மாணவி கலாமிக்கு பெற்றோர் மன்னாரிலேயே ஷெல்பட்டு இறந்து விட்டனர். அண்ணன் திருமணம் செய்து விட்டான். கூலித் தொழிலாளி தான். இவள் பாட்டியுடன் இருந்தாள். சண்டை முடிய ஒரு மாதம் இருந்த போது இயக்கம் பிடித்துக் கொண்டு போய் விட்டது. இயக்கத்தில் ஒரு மாதம் இருந்ததால் இங்கே ஒன்றரை வருடமாக இருக்கிறாள். பாவம் ஏழைப்பாட்டி மடுவில் இருந்தாள். இவள் பாட்டிக்கு ஒரு கடிதம் போட்டாள்.

“பாட்டி,செமினார் துவங்கப் போகுது. எனக்கு நல்ல சட்டையில்லை எப்பிடியாவது ஒரு சட்டை எடுத்துக் கொண்டு வா பாட்டி..”

கிழவி நாலுவீட்டில கையேந்தி, மகனிடமும் வாங்கி, பணத்தை சேர்த்துக் கொண்டு வவுனியாவுக்கு கிழம்பி பஸ் ஏறியாகிவிட்டது. பஸ்ஸால இறங்கி சட்டை வாங்க கடைத் தெருவுக்கு போனாள்.

கலாமி காலைத் தேநீரை எடுக்க அதிகாலை ஐந்து மணிக்கு கிச்சின் மணிகேட்டதும் போனாள். ஏனைய குழுக்களினதும் அன்றைய முறைக்காரர் வந்து அவரவர் தேநீரைப் பெற்றுக் கொண்டு திரும்பினர்.

கலாமி தேநீர் வாளியை வைத்து விட்டு தன்னுடைய தேநீரைக்குடித்தாள். இன்னும் நிலம் வெளிக்கவில்லை. இரண்டு புறமும் அறைகளில் இந்தப்பக்கம் போராளிப் பிள்ளைகளும் முன்புற அறையில் காவற்றுறைப் பிள்ளைகள் தங்கியிருந்தனர்.

கலாமியும் அவள் தோழியர் இருவரும் இடையில் இருந்த (கொரிடோர்) நடைவெளியில் படுத்திருந்தனர். தோழியொருத்தி தலைவாரிக் கொண்டிருந்தாள். மற்றவள் போர்வையை மடித்துக் கொண்டிருந்தாள். கலாமி உடலை நெளித்து தலையணையில் புரண்டாள்.

“சரி சரி எழும்பு முறுகாதை” என்றாள் தோழி.

“ம். எனக்கு மூச்சுவிட கஸ்டமாக இருக்கு “ என்றாள் கலாமி.

ஏதோ வித்தியாசமாக உணர்ந்த தோழி அறைக்குள் இருந்தவர்களை உதவிக்கு அழைத்தாள்.

“ ஙா... ராத்திரி பன்ரெண்டு மணிவரைக்கும் படம்பாத்திட்டு வந்தவா நித்திரை முறியேல்ல” என்றாள் ஒருத்தி.

“எண்டாலும் புனிதாக்காவ கூப்பிடு” என்றாள் லீடர். புனிதா மருத்துவப்பிரிவு போராளி. இங்கே அவசர மருந்துகளை கொடுப்பாள்.

புனிதா போனபோது கலாமி அமைதியாக சோர்ந்து படுத்திருந்தாள். புனிதா அவள் கையைப் பிடித்து பார்த்துவிட்டு உள்ளங்கையை தேய்த்தாள் பிறகு.

“ஆஸ்பத்திரிக்கு உடன கொண்டு போகோணும் “ என்று கத்தினாள்.

முன் அறையிலிருந்த பொலிஸ் பெண் அப்போது தான் வெளியே வந்தாள்.

விரைந்து அலுவலகத்துக்கு அறிவித்து விட்டு நின்ற வாகனத்தில் கலாமியை ஏற்றிக் கொண்டு வைத்தியசாலைக்கு விரைந்தனர்.

நன்கு விடிந்துவிட்டது. கலாமியின் பாட்டி ஒரு நல்ல சுடிதார் ஒன்றை வாங்கிக் கொண்டு முகாமுக்கு வருவதன் முன்னமே, கலாமி இறந்து விட்டாள் என்பதை புனிதா இருந்தவர்களிடம் கூறிவிட்டாள்.

பொலிஸார்விசாரணையைமேற்கொண்டனர். பாட்டி கதறியபடியே சட்டையைக் கொண்டு வைத்தியசாலைக்கு ஓடினாள். அண்ணன் வரவழைக்கப்பட்டு, உடலுடன் இராணுவத்தினரும் கூடவேசென்று மரணச் சடங்கை நிறைவேற்றிவிட்டு வந்தனர்.

கலாமிக்கு என்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியவில்லை.

ஏ.எல். பரீட்சைஎழுதியவர்களும்திருமணமாகி குழந்தை உள்ளவர்களும் விடுவிக்கப்பட்டு ஒருமாதமாயிற்று.

அடுத்த மாதம் முற்பகுதியில் காமென்றுக்கென அழைத்துச் செல்லப்பட்ட பிள்ளைகளில் பதினாறுபேர் திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர். அத்தனை பேரும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக நோயாளர்களாக வந்திருந்தனர்.

எவ்வளவு கெட்டிக்காரப் புத்திசாலியான பிள்ளைகள் ஏன் இப்படியானார்கள்? யாரைக் கேட்பது? இங்கேஇவர்களைபிள்ளைகளுடன் விட்டபோது சுமதி என்ற பெண் மற்றவர்களைத் தாக்க முயன்றார் அவளை வைத்தியசாலைக்கும் அனுப்பவில்லை. வைத்தியரை அழைப்பித்தே காட்டினார்கள்.

இவர்கள் வந்த பத்து நாளில் காமென்றுக்குப் போன அனைவரும் திரும்பி வந்தனர். அனைவரும் செல்பேசி வைத்திருந்தனர். மார்புப்பிளவு தெரியும் வண்ணம் மேற்சட்டைகள், குட்டைப் பாவாடைகள், நாகரீக காலணிகள் என நிரம்பவே மாறிப் போயிருந்தனர்.

எப்போதும் போனைக் காதில் வைத்துக் கொண்டே அலைந்தனர். சிலருக்கு விடிய விடிய பேசத் துணையும் இருந்தது - பேச்சும் இருந்தது. அத்தனை போன்களிலும் காதல் கனிரசமாகச் சொட்டியது. இப்போதெல்லாம் இவர்கள் குசினி முறை வரும் போது அங்கேயும் காய்கறிகளை வெட்டிக் கொண்டு அதைக் குறையில் விட்டுவிட்டு போனில் பேசிக் கொண்டிருந்தனர்.

பார்வதிக்கும் ஒரு செல்பேசி வந்தது. அதை கொண்டு வந்தவள் கலா’ இது என்ர தான் சிம் மாத்திக் கொண்டு வந்திருக்கிறன். நீங்கள் வெளியால வந்தபிறகு புதிசா ஒண்டு வாங்கலாம்’ என்றாள்.

போனமாதம் இந்தக் கைப்பேசி கிடைத்திருந்தால் பார்வதிக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருக்குமோ? அவள் எந்த வகைக்குள்ளும் அடங்கவில்லை. ஐம்பது கடந்தவர்களுடன் அவள் விடுதலையாகவில்லை. திருமணமான குழந்தையுள்ளவர்கள் என்ற வகையிலும் விடுதலையாகவில்லை. இது பற்றி அவள் பிரிகேடியரிடமே கேட்டுப்பார்த்தாள்.

“அம்மா! உங்கட ‘பைல்’ எங்ககிட்ட இல்ல. அது ரி.ஐ.டி க்காறங்க கொண்டு போயிற்றாங்க, நாங்க இங்க சாப்பாடு, மருந்து, பாதுகாப்பு, படிப்பு இவ்வளவு தான்பாக்க ஏலும்”

பார்வதி சோர்ந்துதான் போனாள். சனாதிபதிக்கு தன் மகள் எழுதுவது போல ஒரு கடிதத்தை ஆங்கிலத்தில் எழுதினாள். அதை க்கலாவிடமே கொடுத்து வெளியே தட்டச்சு செய்வித்து தபாலில் சேர்த்தாள். பழையபடி முகாமின் தபாலதிபரை நம்பவில்லை. பதினைந்து நாட்களில் கலாவின் முகவரிக்கு சனாதிபதி செயலகத்திலிருந்து பதிலும் வந்துவிட்டது.

“உங்கள் வேண்டுகோளை கருத்தில் கொள்கிறோம்” என்று கடிதம் வந்த இரண்டு மணிநேரத்துள் கலா அதை க்கொண்டுவந்தாள். சிலர் நீதிமன்றின் ஊடாக வழக்கிட்டு விடுதலையாகி சென்றனர்.

பார்வதி அப்படி கேஸ் போட்டவர்களிடம் விபரம் கேட்டாள்.

“ஒன்றரை லட்சம் வேணும் அன்றி. வழக்கைகோட்டுக்குபோடவேஇருவத்தையாயிரம் வேணும். ரெண்டு தவணை கூப்பிடுவினம். மூண்டாவது தவணைக்கு குற்றம் நிரூபிக்காவிட்டால் விடுதலை. அப்பிடித்தான் கனபேர் போயிற்றினம்.”

“கனபேரண்டா நூறுபேர்..?”

“ ச்சி.. ஒரு பத்துப்பதினைஞ்சு. ஏன் போன மாசம் விட்ட இருநூற்று நாற்பத்தெட்டுப் பேரில.. இருவது பேர் கோட் விடுதலை”

“ஓமடி அந்த முறிப்பு கேரளா மனிசி பிள்ளை சாமத்தியம் பிடிச்சக் கொணந்திட்டாங்கள் எண்டழுததெல்லோ, மூண்டு மாசத்துக்க புருசன்காறன் கோர்ட்டு மூலமாத் தானே வெளியால கொண்டுபோனவன்”

பார்வதி யோசித்தாள். மகனுக்கு கடிதம் போடும் போது இதை ஒரு தகவலாகத்தான் எழுதினாள்.

அவன் பத்து நாட்களில் யாருடைய கையைக்காலைப் பிடித்தானோ, எழுபதாயிரம் ரூபா முன்பணமாக கலாவிடம் அனுப்பி வழக்கை ஆரம்பிக்கச் சொன்னானாம்.

கலா செய்தியோடு செய்தியாக,

“ அப்பா கடுமை வீணீர் வடிக்கிறாரம்மா” என்றாள்.

“சாப்பிடுறாரா?”

“முந்தின அளவில்ல, சாப்பிடுறார்.”

“கொஞ்சம் கவனமாப் பாரம்மா எங்கயும் பால் வாங்கி குடு ஏதும் விருப்பமானதை கேட்டா வாங்கிக்குடு” என்று சொல்லி அனுப்பினாள்.

மூன்றாம் நாள் அவர் இறந்துவிட்டார். வழக்குக்குப்பதிவுக்கென வந்த பணம் செத்த வீட்டுக்கு உதவியது. பார்வதியை முகாமிலிருந்து மரணச் சடங்கில் கலந்து கொள்ள அழைத்துச் சென்றார்கள். பின் அந்தியேட்டி செய்யவும் அனுப்பினார்கள்.

வழக்காடும் எண்ணத்தை பார்வதி கைவிட்டாள்.

காமென்றிலிருந்து பிள்ளைகள் வந்ததும் முகாம் முழுவதுமே கோலம்மாறி உல்லாச விடுதி போலாயிற்று . மாலை லைனில் இருநூற்றைம்பது பிள்ளைகளின் பெயர் வாசிக்கப்பட்டு போனில் பெற்றோருக்கு அறிவிக்கப்ப ணித்தனர்.

“உங்களுக்குபதினைஞ்சாம்தேதிவீட்டுக்கு போகலாம் பொறுப்பெடுக்கிறவங்களின் விபரங்கள் வேணும். எல்லாரும் பதிவு செய்யுங்க” என்றார் மேஜர்.

தேதி நெருங்கியிருந்தது யாழ்ப்பாணம் ஒரு பக்கம், திருகோணமலை இந்த பக்கம். மட்டக்களப்பு அதில, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் எனப் பதிவுகள் நடந்தன. வவுனியாவுக்கு போக்குவரத்தது இல்லை. அவர்கள் தாமாகவே போக வேண்டும் .ஏனைய இடங்களிற்கு பஸ் ஒழுங்கு செய்யப்பட்டது.

அடுத்த நாள் மாலை எட்டுப் பேருடைய பெயர்கள் வந்தன. அதில் பார்வதியின் பெயரும் இருந்தது. அவளைவிட அங்கிருந்த பிள்ளைகளுக்கே அது பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. அதைவிட அங்கு கடமையில் இருந்த மேஜரும் மகிழ்ச்சியடைந்தார். அதை அவர் புன்னகையுடன் ஒரு தலையசைப்பில் புலப்படுத்தினார். இப்ப ராஜி அவளிடம்,

“அண்மையில் உங்கட கஸ்பண்ட இறந்த நேரம் எங்கள விரட்டிக் கொண்டேயிருந்தார். போங்க அம்மாவுக்கு ஆறுதல் சொல்லுங்க தனியா விடாதீங்களென்று.” எனச் சொன்னாள்.

“ஓ...என்னையும் கலைச்சவர்”என்றாள் முகுந்தா.

கவிதா கொழும்புக்கு போனபின் பார்வதியின் அறையில் தங்க வந்தவள். ஆனால் இரண்டு மூன்று நாளிலேயே தன் நண்பிகளுடன் போய்விட்டாள்.

ஆண் போராளிகள் உட்பட ஆயிரத்து முன்னூறு பேர் அன்று வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கலா ,பார்வதியை அழைத்துச் செல்ல வந்திருந்தாள். கவிதாவின் தாய் கவிதாவை கூட்டிச் செல்ல வந்திருந்தாள். “ எதையெல்லாம் எதிர்பார்த்து இந்த முகாமுக்குள் வந்தோம் எதையெல்லாம் கொண்டு செல்கிறோம். இருபிள்ளைகள் பேசிக் கொண்டனர்.

பல பிள்ளைகள் பெற்றாரின் கால்களைத் தொட்டு வணங்கினர். இது இராணுவத்திடம் பழகியது தான். புனர்வாழ்வு.. அது போய்த்தான் பார்க்க வேணும். மீண்டும் ஒரு புதிய உலகில் நுழைகிறோம். எமக்கு வரவேற்பு எப்படி இருக்குமோ...?

(முற்றும்)

LEGAL STUDIES TUITION

YEAR 11 AND YEAR 12

BY VICTORIAN SOLICITOR




FOR FURTHER DETAILS

PLEASE CONTACT:

0405982583

or

Email: nag418662@gmail.com



# மாத ராசிபலன்



## மேடம்

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் நினைத்தது நிறைவேறும் மாதமாகத் திகழப் போகிறது. பொருளாதாரத்தை எடுத்துக்கொண்டால் எதிர்பார்த்த அளவு பணவரவு ஏற்பட வாய்ப்புகள் இருந்தாலும் சில திடீர்ச் செலவுகளால் கையில் இருக்கும் சேமிப்புகள் கரைய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். உடல் நலனில் நல்ல முன்னேற்றம் தென்படும். கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக இருப்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் பிரச்சினைகள் பெரிதாகாமல் தவிர்க்க முடியும். புதிதாக எந்த ஒரு காரியத்தையும் இந்த மாதத்தில் தொடங்குவதைத் தவிர்ப்பது நன்மை.

## இடபம்

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் நிதானமாகச் செயல்பட வேண்டிய மாதமாக திகழப்போகிறது. பொருளாதாரத்தை பொறுத்தவரை வரவுக்கேற்ற செலவு ஏற்படும். உடல் நலனில் சிறு சிறு பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் அவ்வப்பொழுது மருத்துவச் செலவுகள் ஏற்படும். கணவன்- மனைவிக்கிடையே ஒற்றுமை மேலோங்கும் என்றாலும் ஒரு முடிவை எடுப்பதற்கு முன்பு துணையின் அறிவுரையை கேட்டு எடுத்தால் பிரச்சினைகள் வராமல் பார்த்துக் கொள்ள முடியும். மேலும் மறைமுக எதிர்ப்புகளை சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். புதிதாக முதலீடு செய்வதற்கு முன் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து நலம் விரும்பிகளின் ஆலோசனையைப் பெற்று முதலீடு செய்வது நன்மை தரும்.

## மிதுனம்

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதமாக திகழப் போகிறது. பொருளாதாரத்தை எடுத்துப்பார்த்தால் எதிர் பார்த்த அளவு பணவரவு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கிறது. ஒரு சிலருக்கு எதிர்பாராத பண வரவும் ஏற்படும். உடல்நலம் சீராக இருக்கும். இருப்பினும் உணவுப்பழக்கங்களில் கவனம் தேவை. கணவன்- மனைவிக்கு இடையே ஒற்றுமை அதிகரித்தாலும் சிறு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. திருமணத்திற்காக காத்திருப்பவர்களுக்கு நல்ல செய்தி வந்து சேரும். ஒரு சிலருக்கு தள்ளிப் போயிருந்த குழந்தை பாக்கியம் கிடைக்கும். வேலையை பொறுத்தவரை சாதகமான சூழ்நிலையை நிலவுகிறது. இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாக திகழ்வதற்கு சிவ பெருமானை வழிபட வேண்டும்.

## கடகம்

கடக ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் புத்துணர்ச்சியான மாதமாகத் திகழப் போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்த வரை சாதகமான சூழ்நிலையே தென்படுகிறது. பணவரவிற்கு எந்தவித குறையும் இருக்காது. உடல் நலத்தில் கவனம் தேவை. சிறிய உபாதை ஏற்பட்டவுடன் அது சம்பந்தப்பட்ட மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுவதன் மூலம் பெரிய பிரச்சினை வராமல் தவிர்க்க முடியும். கணவன் - மனைவிக்கு இடையே பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக இருப்பதால் விட்டுக் கொடுத்தும் அனுசரித்தும் செல்வது நன்மை தரும். இதுவரை இருந்து வந்த பிரச்சினைகள் அனைத்தும் படிப்படியாக நீங்க வாய்ப்பு அதிகமாக இருக்கிறது.

## சிம்மம்

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் ஏற்றம் மிகுந்த மாதம்.. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை பணவரவிற்கு எந்தவித குறையும் இருக்காது. எனினும் செலவுகள் செய்யும் பொழுது ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்தால் வீண் விரயமாவதைத் தவிர்க்க முடியும். குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. கணவன் -மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். மேலும் புதிய வருமானத்திற்காக முயற்சி செய்பவர்களுக்கு வெற்றி கிட்டும். புதிதாக தொழில் செய்ய நினைப்பவர்களுக்கு சிறந்த காலமாகத் திகழப் போகிறது. தொழிலை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்ல முடியும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு துர்க்கை அம்மனை வழிபட வேண்டும்.

## கன்னி

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் கனவுகள் நிறைவேறும் மாதமாகத் திகழப் போகிறது. பொருளாதாரத்தை பொறுத்த வரை பண வரவிற்கு எந்தவித குறையும் இருக்காது. எனினும் வீண் விரயம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நன்மை தரும். உடல் ஆரோக்கியத்தில் இருந்து வந்த குறைபாடுகள் அனைத்தும் நீங்கி உடல் ஆரோக்கியமாக இருக்கும். கணவன் -மனைவிக்கிடையே வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் துணையுடன் அமைதியான போக்கை கையாளுவது நன்மை தரும். தொழிலைப் பொறுத்தவரை இரட்டிப்பு லாபத்தை பெறுவதற்குரிய வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. அதனால் தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

## துலாம்

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் பொறுமையைக் கையாள வேண்டிய மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்த அளவிற்கு பணவரவு இருக்கும். அதற்கேற்றாற்போல் செலவுகளும் ஏற்படும். உடல் நலன் சீராக இருக்கும். கணவன்- மனைவிக்கு இடையே ஒற்றுமைகள் அதிகரிக்கும். ஒரு சிலருக்கு வெளிநாட்டு யோகம் ஏற்பட வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. வேலை சுமை அதிகமாக இருந்தாலும் உடன் பணிபுரிபவர்களின் துணையுடன் வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு வள்ளி -தெய்வானை சமேத முருகப்பெருமானை வழிபட வேண்டும்.

## விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் தைரியம் நிறைந்த மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தை பொறுத்தவரை எதிர்பார்த்த அளவு பணவரவு கிடைக்கும். உடல் நலம் சீராக இருக்கும். இதுவரை கணவன்- மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் மோதல்கள் அனைத்தும் நீங்கி ஒற்றுமை மேலோங்கும். வேலைச்சுமை சற்று அதிகமாகவே இருந்தாலும் தங்களின் புத்திசாலித்தனத்தால் அதைச் செம்மையாகச் செய்து முடித்து அலுவலகத்தில் நல்லபெயரை வாங்குவீர்கள். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு லட்சுமி- நரசிம்மரை வழிபட வேண்டும்.

## தனுசு

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் அதிர்ஷ்டகரமான மாதமாகத் திகழப் போகிறது. உடல் நலத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கணவன்- மனைவிக்கிடையே ஒற்றுமை மேலோங்கும். நினைத்த காரியத்தை நினைத்தபடி செய்து முடிக்கும் ஆற்றலைப் பெறுவீர்கள். வேலைச்சுமை குறைவாகவே இருக்கும். தங்கள் வேலையைச் சிறப்பாக செய்து முடிப்பதன் மூலம் எதிர்பார்த்த சலுகைகள் அனைத்தையும் பெற முடியும். தொழிலைப் பொறுத்தவரை எதிர்பாராத லாபம் கிடைப்பதற்கு வாய்ப்பு அதிகமாகவே இருக்கிறது. புதிய தொழில் தொடங்க விரும்புவோருக்கு சாதகமான காலமாக இந்தக் காலம் இருக்கும்.

## மகரம்


மகர ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் விஸ்வரூப வெற்றியைத் தரும் மாதமாக திகழப் போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பாராத இடங்களில் இருந்து பல வகைகளில் பணவரவு உண்டு. உடல்நலம் சீராக இருக்கும். கணவன்- மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரித்தாலும் சில சண்டைகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. விடாமுயற்சியுடன் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடித்து நல்ல பலனை அடையும் மாதமாகவே இந்த மாதம் திகழும். தொழிலைப் பொறுத்தவரை தொழிலில் இருந்து வந்த தடைகள் அனைத்தும் விலகி தொழில் லாபகரமாக நடக்கும்.

## கும்பம்

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் தொட்டது துலங்கும் மாதமாக திகழப்போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை பணவரவிற்கு எந்தவிதக் குறையும் இருக்காது. இருப்பினும் ஒரு சிலருக்கு வீட்டைப் புதுப்பிப்பதில் செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. உடல்நலம் சீராக இருக்கும். கணவன் -மனைவிக்கிடையே சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு நீங்கும். திருமணத்தை எதிர்நோக்கி இருப்பவர்களுக்கு நல்ல செய்தி வந்து சேரும். குழந்தைப் பாக்கியம் தள்ளிப் போனவர்களுக்கு விரைவிலேயே குழந்தைப் பாக்கியம் ஏற்படும். எடுத்த காரியங்கள் அனைத்தையும் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாக திகழ்வதற்கு மகாலட்சுமி தாயாரை வழிபட வேண்டும்.

## மீனம்

மீன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் வாய்ப்புகள் தேடி வரும் மாதமாக திகழப் போகிறது. பொருளாதாரத்தை பொறுத்த வரை பணம் பல வழிகளில் வந்து சேரும். உடல் ஆரோக்கியத்தில் இருந்து வந்த தடைகள் அனைத்தும் நீங்கி உடல் நலன் மேலோங்கும். கணவன் -மனைவிக்கிடையே சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும் அவை நீங்கி ஒற்றுமையுடன் மகிழ்ச்சியுடனும் வாழ்வீர்கள். எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி பெறுவீர்கள். அதனால் உங்களின் மதிப்பும் மரியாதையும் கூடி புகழ் அதிகரிக்கும் மாதமாகவே இந்த மாதம் திகழும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்ள வேண்டும்.


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Security Alarm
Data & Tele-communication
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transsco™
CARGO

=

#1
FREIGHT
FORWARDER
FROM AUSTRALIA TO SOUTH ASIA

ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

ONLINE TRACKING
SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
LIVE CHAT ON WEBSITE
TRANSCO APP

We love to deliver

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU